# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 12 அக்டோபர் -1999 இதழ் - 10



"ஆதியிலே தேவன் வானத்தையும்,
பூமியையும் சிருஷ்டித்தார்." ஆதி. 1:1

*வெளியிடுவோர்*

**காங்கயம் கிறிஸ்துவின் சபையார்**

**தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701**
**தமிழ்நாடு, இந்தியா.**

## அரிய வாய்ப்பு

திருமறை ஆசான் மாத இதழின் நிறுவன ஆசிரியர் சகோ. E.Z. செல்வநாயகம் அவர்கள் பல்வேறு தலைப்புகளின் கீழாக எளிய நடையில் எழுதி, அநேகர் பயன் பெற்ற 40க்கும் அதிகமான கட்டுரைகளைத் தொகுத்து "ஆத்தும ஆதாயப் பிரசங்கங்கள்" என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளோம்.

தரமான தாளில் அச்சிடப்பட்டு, நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, அழகிய தோற்றமுடையதாய் வடிவமைக்கப்பட்டுள்ள இந்நூல் சுமார் 250 பக்கங்களைக் கொண்டது.

சத்தியம் விரும்பிகள் அனைவருக்கும் நிறைந்த பயனைத் தரக் கூடியது. தபாலில் பெற விரும்புவோர் அனுப்ப வேண்டிய தொகை ரூ. 30/– மாத்திரமே.

முகவரி :. தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்
தபால் பெட்டி எண் 27, காங்கயம் – 638 701.

குறிப்பு : தயவு செய்து M.O. கூப்பனில் உங்கள் முகவரியை தெளிவாக எழுதுங்கள்.

## ஆசானின் அறிவுரையிலே...


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | "நீங்கள் எப்படி மரிக்கப் போகிறீர்கள்?" | 1 |
| 2. | சபையில் பெண்களின் பங்கு | 11. |
| 3. | ஜெபித்த உங்களுக்கு நன்றி | 16 |
| 4. | பெண்கள் பகுதி | 18 |
| 5. | வாலிபர் பகுதி | 21 |
| 6. | உலக வீடியோ வேதாகமக் கல்லூரி (விளம்பரம்) | 25 |
| 7. | தெரிந்து கொள்ளுங்கள் | 26 |
| 8. | வெளிப்படுத்தின விசேஷம் (பாகம் - 6) | 29 |

# THIRUMARAI AASAAN

**Editor**
**S. RAJANAYAGAM**

**Honorary Editor**
**J.C.CHOATE**

**Published by Church of Christ**
**Dharapuram Road, KANGAYAM - 638 701, Tamilnadu, India**
**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol. 12** **October-1999** **Issue -10**

*ஆசிரியவுரை*

## "நீங்கள் எப்படி மரிக்கப் போகிறீர்கள்?"

இப்படிக் கேட்பதற்கு பதிலாக, நீங்கள் எப்பொழுது மரிக்கப்போகிறீர்கள் என்று நேரிடையாகவே கேட்டிருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்குமே என எண்ணுகிறீர்களா? இல்லையில்லை, நீங்கள் நினைப்பது போன்ற ஒரு பதிலைப் பெற்றுக் கொள்வதற்காக இந்தக் கேள்வி கேட்கப்படவில்லை. ஏனெனில், "நான் இப்படித்தான் மரிப்பேன்" என்று அடித்துச் சொல்வதற்கு மரணத்தின் மீது மனிதனுக்கு அதிகாரமில்லை. அவன் விரும்பும் சமயத்திலும், விரும்பும் விதத்திலும் மரணத்தைச் சந்திக்கலாம் என்ற உரிமை அவனுக்குத் தேவனால் கொடுக்கப்படவில்லை. ஆகவே, கேள்வியின் நோக்கம் அதுவல்ல. ஒருவேளை மரிக்கும் நாளும், மரிக்கும் விதமும் அவனுக்கு மறைக்கப்பட்டிருந்தாலும், "மரிக்கும் நிலை" பற்றி முடிவெடுக்கும் உரிமை அவனுக்கு மறுக்கப்படவில்லை. அதாவது, அவன் விரும்பினால், தன்னைப்படைத்த தேவனுக்கு உகந்த வாழ்க்கை வாழ்ந்து நீதிமான் என்ற நிலையில் மரிக்கலாம் அல்லது அவருக்கு விரோதமாக வாழ்ந்து அநீதிமான் என்ற நிலையில் மரிக்கலாம்.

பரிசுத்த வேதாகமம், ஒரு மனிதனின் மரணத்தைப் பற்றிச் சொல்லும்போது, அவன் "மதிகெட்டவன் சாகிறதுபோல செத்துப்போனானோ? என்று கேள்வி எழுப்புகிறது. அப்படியானால் இப்பூமியில் பிறந்த ஒவ்வொரு மனிதனும்

மதியுள்ளவனாகவும், மதிகெட்டவனாகவும் வாழ்ந்து மரிக்க வாய்ப்புண்டு என்பது திட்டமாகத் தெரிகிறது. நமது தலைப்பில் ஏன் இப்படியொரு கேள்வி கேட்கப்பட்டுள்ளதென்பதற்கான காரணம் இப்பொழுது கொஞ்சம் விளங்கியிருக்குமென நம்புகிறேன்.

வேதாகமத்தில் எழுப்பப்பட்டுள்ள இக்கேள்வியானது, தாவீது ராஜாவைக் கொண்டு சொல்லப்பட்டுள்ளது. ஆம், இஸ்ரவேலின் முதல் ராஜாவாகிய சவுலின் படைத்தளபதியாக இருந்து, பல யுத்தங்களைச் சந்தித்து, பேரும் புகழும் பெற்றிருந்த " அப்னேர்" என்பவனின் மரணச் செய்தியைக் கேட்டு, அவனுக்காக புலம்பி, **"மதிகெட்டவன் சாகிறதுபோல, அப்னேர் செத்துப் போனானோ?"** என்கிறான் தாவீது. (2. சாமு. 3:33).

இன்னும் கூட சில சந்தர்ப்பங்களில் தாவீது மரித்தவர்களுக்காகப் புலம்பியிருக்கிறான். புலம்புவது ஒன்றும் அவனுக்குப் புதிதல்ல. உதாரணமாக, தனது மகன் அப்சலோம் அந்தரத்தில் தொங்கி மரித்தபோது இவ்விதம் புலம்பியுள்ளான். "என் மகனாகிய அப்சலோமே, என் மகனே, என் மகனாகிய அப்சலோமே, நான் உனக்குப் பதிலாக செத்தேனானால் நலமாயிருக்கும்; அப்சலோமே, என் மகனே, என் மகனே என்று சொல்லி அழுதான்". (2. சாமு. 18 : 33). ஆனால் இந்தப் புலம்பலில், அப்சலோம் மதிகெட்டவன் போல் மரித்துப்போனான் என்று புலம்பினதாக காணோம். ஆனால், உண்மையில், அப்னேரின் மரணத்தையும், அப்சலோமின் மரணத்தையும் நாம் ஒப்பிட்டுப் பார்த்தால், அப்சலோமின் மரணமே மதிகெட்ட ஒரு மரணமாக நமது கண்களுக்குத் தெரியும்.

ஏனெனில் அப்சலோமின் வாழ்க்கையின் தரம் அப்படிப்பட்டது. பெற்றெடுத்த தகப்பனுக்கு விரோதமாக எழும்பி, ராஜ்ஜியத்தில் கலகம்பண்ணி அவன் மஞ்சத்தில் ஏறி, சகோதரனைக் கொன்று என இப்படி அவன் புத்தியீன காரியங்களை நாம் அடுக்கமுடியும். பிறகு ஒரு சமயத்தில் தகப்பனாகிய தாவீதின் ஆட்களோடு நடந்த சண்டையில், தப்பியோடும்போது, தனது தலைமுடியின் தன்மைபற்றியும், எதிரே நிற்கிற மரத்தின் உயரம் மற்றும் அதன் விளைவு பற்றியும் கூட சிந்தியாமல் அல்லது சிந்திக்க அறிவில்லாமல், கர்வாலி மரத்தில் அந்தரத்தில் தொங்கினபடியால் ராஜகுமாரனாகிய இவனை வேலையாட்கள் அடித்துக் கொன்றார்கள். (2. சாமு. 18 ; 9, 15). புத்தியற்ற ஒரு வாழ்க்கை வாழ்ந்து அவமானமுள்ள ஒரு மரணத்தைச் சந்தித்த இந்த அப்சலோமுக்காக தாவீது புலம்பும்போது கூட **"மதிகெட்டவன் சாகிறதுபோல அப்சலோம் செத்துப்போனான்"** என்று புலம்பவில்லை.

ஆனால், அப்னேருக்காகப் புலம்பும்போது மாத்திரம், "மதிகெட்டவன் சாகிறதுபோல செத்துப்போனானோ? என்று ஏன் தாவீது புலம்பினான். வேத

வாக்கியங்களேல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது என்ற பொருளினடிப்படையில் பார்க்கும்போது, தாவீது, அப்னேரின் மரணத்தை, இப்படிக் கண்டான் என்பதைவிட, தேவன், அப்னேரின் மரணத்தை, "மதிகெட்டவனின் மரணம்" என்று சொல்கிறார் என்பதே சரியானது. எத்தனையோ மரணங்கள் வேதாகமத்தில் குறிக்கப்பட்டிருக்கிறது. இருப்பினும் இவன் மரணம் மட்டும் முற்றிலும் வேறுபட்ட கோணத்தில் பார்க்கப்பட்டிருக்கிறது. கண்டிப்பாக, அதற்குக் காரணமில்லாமலிருக்காது. அதை அறிந்து கொள்ள முயற்சிப்போம்.

அதற்கு முன்பாக, நமது வழக்கத்தின்படி பின்னணிக்குச் செல்வோமா? :சவுல் ராஜாவின் மரணத்திற்குப் பிறகு, தன்னைத் தட்டிக் கேட்பதற்கு ஆளில்லை என்ற நிலையிலிருந்த, அப்னேர், சவுலின் மகனாகிய "இஸ்போசேத்"தை ஒப்புக்கு ராஜாவாக்கி (2. சாமு. 2 : 8, 9) இவன் சர்வ வல்லமை பெற்ற தளபதியாகத் திகழ்ந்தான். "ரப்பர் ஸ்டாம்ப் ராஜாவாக" சில காலம் இருந்த இஸ்போசேத் இவனுடைய ராஜதுரோக செயல்களைக் கூட கண்டித்துணர்த்தமுடியாமல், இவனுக்குப் பயந்து வாழ்ந்தான். (2. சாமு. 3 : 7-11).

ஒரு சமயத்தில் சவுலின் படைத்தளபதியாக இருந்த அப்னேரும், தாவீதின் படைத்தளபதியாக இருந்த யோவாபும், கிபியோனின் குளத்தண்டையில் தங்கள், தங்கள் ஆட்களுடன் எதிர்பட்டுக் கொண்டார்கள். (2 : 12, 13). அங்கே, இந்த அப்னேரின் ஆலோசனைப்படி ஒரு "வேடிக்கை யுத்தம், மூட்டப்படுகிறது. (2 : 14) விளையாட்டு வினையானது என்பதுபோல, யுத்தம் கடினமாகி, அப்னேரும் அவனுடைய ஆட்களும் தாவீதின் சேவகரால் முறியடிக்கப்படுகிறார்கள். (2 : 17).

அப்பொழுது, உயிருக்குத் தப்பி ஓட்டம்பிடித்த அப்னேரை, யோவாபின் சகோதரனும், கலைமான் போல வேகமாக ஓடுகிறவனுமாகிய ஆசகேல் துரத்துகிறான். அப்னேர் திரும்பிப்பார்த்து, ". . . . நீ வலது பக்கத்திலாகிலும் இடது பக்கத்திலாகிலும் விலகி, வாலிபரில் ஒருவனைப் பிடித்து அவனை உரிந்து கொள் " என்று கெஞ்சாத குறையாக முறையிடுகின்றான். ஆசகேலோ, விடமாட்டேன் என்று துரத்துகிறான். "பின்னும், அப்னேர் ஆசகேலை நோக்கி: நீ என்னை விட்டுப்போ; நான் உன்னைத் தரையோடே ஏன் வெட்டவேண்டும்? பிற்பாடு உன் சகோதரனாகிய யோவாபின் முகத்தில் எப்படி விழிப்பேன் என்றான்". (2 : 22) இப்படிச் சொல்லியும் அல்லது இவ்வளவு தூரம் சொல்லியும் அவன் விலகிப் போக மறுத்தபோது, வேறுவழியில்லாமல், தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள, ஈட்டியின் பின்புற அலகினால் குத்தியிருக்கிறான். அவன் மரித்தான்.

இங்கே, அப்னேரின் செயலைக் கவனித்துப் பார்த்தால், அவன் ஆசகேலைக் கொல்லவேண்டுமென்று விரும்பிக் கொலை

செய்யவில்லையென்பது இலேசாகவே புரியும் அதுமாத்திரமல்ல, அது திட்டமிட்டுச் செய்யப்பட்ட கொலையுமல்ல. இன்னும், வேறொரு காரியத்தையும் கவனிக்க நாம் இங்கே மறந்துவிடக்கூடாது. "நான் உன்னைத் தரையோடே ஏன் வெட்டவேண்டுமென்றவன்" அப்படிச் செய்யாமல், ஈட்டியின் பின்புற அலகினால் குத்தியிருக்கிறான். அவன் முதலில் சொன்னபடி செய்யாமல் வேறு முறையைக் கையாண்டுள்ளபடியால், அதுவும் ஈட்டியின் பின்புற அலகைப் பயன்படுத்தியுள்ளதால், இன்னும் ஒருமுறை அவனை மிரட்டித் திரும்பிப் போக வைக்க முயற்சித்து, ஆசகேல் ஓடிவந்த வேகத்தினால் அது வயிற்றில் தவறுதலாக ஏறியிருக்குமோ? இதற்கும் வாய்ப்பில்லாமலில்லை. எது எப்படியிருந்தபோதிலும், இவன் மோசேயின் பிரமாணத்தில் சொல்லப்பட்டுள்ள அடைக்கலப்பட்டணத்திற்குப் பாத்திரமான ஒரு கொலையையே செய்துள்ளான்.

அடைக்கலப்பட்டணம் பற்றி நாம் சிறிது தெரிந்துகொள்வது, இதை இன்னும் சரியாகப் புரிந்துகொள்வதற்குப் பிரயோஜனமாக இருக்கும். இஸ்ரவேலின் சகல கோத்திரங்களுக்குள்ளும், ஆறு பட்டணங்களைத் தேவன் தெரிந்துகொண்டு அவர்களுக்கு அடைக்கலப் பட்டணங்களாக இருக்கும்படி கொடுத்தார். அவைகள் யோர்தானுக்கு இப்புறத்தில் மூன்றும், அப்புறத்தில் மூன்றுமாக இருக்கும்படி செய்தார். இஸ்ரவேலின் எந்தக் கோத்திரத்துக்கும் அது தூரமாயிராதபடி ஏற்படுத்தினான். அந்தப் பட்டணங்கள் உயர்ந்த மதில்களால் சூழப்பட்டு பாதுகாப்புள்ளவைகளாக்கப்பட்டது. பட்டணத்தின் அடைக்கலப் பகுதிக்குள் செல்வதற்கு ஒரு பிரதான வாயில் இருந்தது. அதற்குப் பெயர் தான் ஒலிமுகவாசல் அந்தப் பட்டணங்களுக்குள் ஓடிப்போவதற்கு என்ன தகுதி வேண்டுமென்பதும் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. "கொலை செய்து அங்கே ஓடிப்போய், உயிரோடிருக்கத்தக்கவன் யாரென்றால் தான் முன்னே பகைத்திராத பிறனொருவனை மனதறியாமல் கொன்றவன் தானே". (உபா. 19 : 4).,

மேற்சொன்ன, இந்த வசனத்தின்படி அப்னேர், ஆசகேலை முன்னே பகைத்திராதபடியாலும், மனதார அவனைக் கொலை செய்யாதபடியாலும், அவன் தேவனால் திட்டமிடப்பட்டு, அவருடைய தாசர்களால் ஏற்படுத்தப்பட்ட அடைக்கலப் பட்டணங்களுக்குள் சென்று, தன்னை அவனுடைய எதிரிகளிடமிருந்து காப்பாற்றிக்கொள்ள முற்றிலும் தகுதி படைத்தவனே.

கொலை செய்துவிட்டு, இந்தப் பட்டணத்திற்கு ஓடிவருகிறவன் என்ன செய்ய வேண்டுமென்பதையும் கொஞ்சம் கவனித்துக் கொள்ளுங்கள். "அந்தப் பட்டணங்களில் ஒன்றிற்கு ஓடிவருகிறவன், பட்டணத்தின் ஒலிமுகவாசலில் நின்றுகொண்டு அந்தப் பட்டணத்தினுடைய மூப்பரின் செவிகள் கேட்க, தன் காரியத்தைச் சொல்வானாக: அப்பொழுது அவர்கள் அவனைத் தங்களிடத்தில் பட்டணத்துக்குள்ளே சேர்த்துக்கொண்டு, தங்களோடே குடியிருக்க அவனுக்கு இடம் கொடுக்கக்கடவர்கள்" (யோசு. 20 : 4. அடைக்கலப் பட்டணத்திற்கு ஓடி

வருகிறவன் ஒலிமுக வாசலண்டையில் வந்து சேர்ந்துவிட்ட நிலையில் அவனுக்கு ஆபத்து நீங்கிவிட்டதென்று சொல்லமுடியாது. அவன் மோசேயின் பிரமாணத்தில் கொடுக்கப்பட்டுள்ள சட்டத்தின்படியாகவும், பட்டணத்து மூப்பரின் ஒப்புதலோடும், பட்டணத்திற்கு உள்ளே, சென்றுவிடவேண்டும். அப்பொழுதுதான் அவனுக்கு பாதுகாப்பு நிச்சயம்.

சரி, இப்பொழுது சவுலின் படைத்தளபதியாய் இருந்த அப்னேர் மரித்த அல்லது கொலை செய்யப்பட்ட சூழ்நிலையைக் குறித்து வசனம் என்ன சொல்கிறதென்று கொஞ்சம் குனிந்து பாருங்கள். "அப்னேர் எப்ரோனுக்கு திரும்பி வருகிறபோது, யோவாப் அவனோடே இரகசியமாகப் பேசப் போகிறவன் போல, அவனை ஒலிமுகவாசலின் நடுவே ஒரு பக்கமாய் அழைத்துப்போய், தன் தம்பி ஆசகேலுடைய இரத்தப்பழியை வாங்க, அங்கே அவனை வயிற்றிலே குத்திக்கொன்று போட்டான்". (2. சாமு. 3. 33).

நன்றாக கவனித்துக் கொள்ளுங்கள், அப்னேர் கொலை செய்யப்பட்ட பட்டணம் எப்ரோன். கீரியாத் அர்பா என்றழைக்கப்படும் எப்ரோன் ஆறு அடைக்கலப்பட்டணங்களுள் ஒன்று. அவன் கொலைசெய்யப்பட்டது, ஒலிமுகவாசலுக்கு அருகாமையில், அங்கு கையாளப்பட்ட போர்முறை தந்திரம். இப்பொழுது சொல்லுங்கள். தாவீதுடைய புலம்பலில் ஏதாவது நியாயம் தென்படுகிறதா? அதில் ஒளிந்திருக்கும் உண்மையின் ஓசை உங்களுக்குக் கேட்கிறதா? பரிசுத்த ஆவியானவர், காரண காரியமில்லாமல், "மதிகெட்டவன்" என்ற கடுமைமிகு வார்த்தையைப் பயன்படுத்தமாட்டார் தானே. அப்படியானால், அதற்கு காரணம் தான் என்ன?

ஆம், அப்னேர் தான் செய்த கொலை என்கிற பாவத்திலிருந்து, தப்பித்துக் கொள்ள விரும்பி, அதற்கு உதவி செய்யக்கூடியது எது என்று கண்டு, அடைக்கலப் பட்டணத்திற்கு வந்து சேர்ந்தான். அத்தோடு நிற்காமல், பட்டணத்தின் பாதுகாப்பு அரணுக்குள் வழிநடத்தும் ஒலிமுக வாசலையும் கிட்டிச் சேர்ந்துவிட்டான். ஆனால், என்ன பரிதாபம், தன் பாவத்திலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு, தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும்படியான வாய்ப்பு அப்னேருக்குப் பிரகாசமாக இருந்தும், தன் எதிரியாகிய யோவாபினால் வஞ்சிக்கப்பட்டு மரித்துப்போனான். ஆகவேதான், தாவீது, அவன் மரணச் செய்தியைக் கேட்டவுடன், "அப்னேர், மதிகேடனைப்போல மரித்துப்போனானோ" என்று புலம்பியுள்ளான். தான் காப்பாற்றப்படுவதற்கும், மரித்துப் போவதற்கும் இடையேயிருந்த தூரம் சில அடிகள் தான். ஆம், ஒலிமுகவாசல் வரைக்கும் வந்தவன், இன்னும் இரண்டு எட்டு வைத்திருந்தால், ஒலிமுகவாசலுக்கு உள்ளே சென்றிருக்கலாம். இது கூடத் தெரியாமல் செத்தவனை, மதிகேடன் என்று சொல்லாமல், அறிவாளி என்றா சொல்லமுடியும்? சந்தேகமில்லாமல் மதிகேடனே.

அன்பான தேவப்பிள்ளைகளே! இந்தச் சம்பவத்தை. அப்படியே எடுத்து நாம் காண்கின்ற இந்த உலகத்தோடும். நடைமுறையிலிருக்கும் இன்றைய கிறிஸ்தவத்தோடும் ஒப்பிட்டுப் பார்த்தால், கிட்டத்தட்ட எல்லோருமே. "மதிகேடன் சாகிறது போலவே செத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்வதற்கு ஒருவன் பெரிதாகத் தயங்கத் தேவையில்லை. ஏனெனில் தாங்கள் செய்கின்ற பாவமான காரியங்களிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்கான வாய்ப்புகள் மிகப் பிரகாசமாகக் அவனுக்கு கொடுக்கப்பட்டிருந்தும் அவைகளை அவன் முறையாகப் பயன்படுத்தாமல், தாங்கள் செய்வதே சரி: என்ற மமதையாலும். தாங்களும் அங்கீகரிக்கப்படுவோம் என்ற அறியாமையாலும் தங்களைத் தாங்களே அழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த உலகின் ஒரு பிரிவினரை தேவனுடைய வார்த்தை நேரிடையாகக் குற்றஞ்சாட்டி, அவர்களை மதிகேடர்கள் என்று தீர்ப்பளிக்கிறபடியால், நாம் அவர்களைக் குறித்து மேற்கொண்டு பேசவே தேவையில்லை. "தேவன் இல்லையென்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக்கொள்ளுகிறான்..." (சங் 14:1). அப்படியானால், இறை நம்பிக்கைகொண்ட யாவரும் மதியுள்ளவர்களா? இல்லவே, இல்லை.

எனக்கன்பானவர்களே, இப்பொழுது நாம் கண்ட, இந்த அப்னேருடைய முழுச் சம்பவத்தையும், நம்முடைய மனதில் அப்படியே ஏந்தி. இவ்வுலகைச் சுற்றி வலம் வருவோமானால், தேவன் இல்லையென்கிற மதிகேடர்களைத் தவிர்த்த ஏனைய உலகை மூன்று பிரிவாகப் பிரிக்க முடியும். இறைப் பற்றுள்ள இம்மூன்று பிரிவினருமே, தாங்கள் நல்லவர்களாக வாழவேண்டுமென்ற விருப்ப முள்ளவர்களாக உள்ளனர். அவர்களில் ஒரு சாரார் மட்டுமே வேதத்தின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்கிறார்கள். மற்ற இரண்டு பிரிவினரும். பழைய ஏற்பாட்டின் காலத்தில், கழுதை தன் வாயைத் திறந்து பேசுவதற்குக் காரணமாயிருந்த பிலேயாமைப் போல், நீதியுள்ளவர்களாக வாழவேண்டுமென்று ஆசைப்படுகின்றனர். அவன் "....நீதிமான் மரிப்பதுபோல் நான் மரிப்பேனாக, என் முடிவு அவன் முடிவுபோல் இருப்பதாக" என்றான் (எண்.23:10). ஆனால், வேதாகமத்தின் பக்கங்களைப் புரட்டிப் புரட்டிப் பார்த்து, துருவித் துருவித் தேடினாலும், பிலேயாம் ஆசைப்பட்ட மாதிரி மரித்ததாக இல்லை. ஆசையிருந்தது, ஆனால், அதற்கேற்ற செயல்பாடு இல்லை. இந்த இரண்டு பிரிவினரும் பிலேயாம் போலவே, விரும்பியும் அதை அடைய முடியாமல், மதிகெட்டவர்களாக மரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இப்பொழுது, அம்மூன்று பிரிவினரையும், அப்னேரின் சம்பவத்தோமாடு ஒப்பிட்டுப் பார்ப்போம்.

## I எப்ரோனும், மத நம்பிக்கையாளர்களும்

இந்த உலகத்தில், இறைப்பற்றுள்ள ஒவ்வொருவரையும் நாம் கவனித்துப் பார்த்தால், ஒருவேளை அவர்கள் எந்த மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், ஓர் உண்மை பளிச்சென விளங்கும். எல்லோரும் தங்களின் பல தவறான செயல்களுக்குப் பரிகாரம் தேடவேண்டுமென்ற எண்ணமுடையவர்களாகவே இருக்கிறார்கள். ஆகவேதான், தங்களுக்குத் தெரிந்த அல்லது ஏற்கெனவே வழக்கத்திலுள்ள அல்லது தங்களுக்குப் போதிக்கப்பட்ட விதவிதமான காரியங்களை, அதுவும் பகுத்தறிவுக்குச் சற்றும் சம்பந்தமில்லாத காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். தங்களின் அந்த எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு சில இழப்புகளைச் சந்திக்கவும்கூட அவர்கள் அஞ்சுவதில்லை. ஒருவேளை, செய்கின்ற செயல்களில் மதத்திற்கு மதம் வேறுபட்டிருந்தாலும், அவர்களின் ஒட்டுமொத்த நோக்கத்தைப் பொறுத்தவரையில் பெரிய வித்தியாசம் இல்லை. தங்களின் பரிகாரச் செயலின் மூலம், தாங்கள் செய்த பாங்களுக்குத் தண்டனை கிடைக்கக் கூடாது என்றோ அல்லது பாவவிமோசனம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றோ அல்லது முக்திப்பேறு அடையவேண்டுமென்றோ விரும்புகின்றனர். அதாவது, ஆத்துமா சம்பந்தப்பட்டளவில் தாங்கள் அழிக்கப்படாமல், காப்பற்றப்பட வேண்டுமென்பதில் கவனமாக உள்ளனர்.

இப்படிப்பட்ட மத நம்பிக்கையாளர்களை அப்னேருடைய சம்பவத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால், இவர்களை எப்ரோனுக்கு ஓடி வந்த அப்னேர்கள் என்று நாம் சொல்ல முடியும். எப்படி அப்னேர், தன்னுடைய கொலை பாவத்திலிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ள, கிபியோனின் குளத்தண்டையயிலிருந்து அடைக்கலம் தேடி தனக்கு தெரிந்த எப்ரோனுக்கு ஓடி வந்தானோ, இது போல, இவர்களும் தங்களின் பலபாவச் செயல்களிலிருந்து தங்களைக் காப்பற்றிக் கொள்ளும்படியாய் தங்களுக்குத் தெரிந்த பல எப்ரோன்களுக்குச் செல்கின்றனர்.

ஆனால், அப்னேர், அடைக்கலம் தேடுவது நல்லது என்று தெரிந்தும், அடைக்கலம் தேடி வெகு தூரம் ஓடிவந்தும், அடைக்கலப்பட்டணமாகிய எப்ரோனை அடைந்தும், எப்படித் தேடிவேண்டுமோ அப்படித் தேடாமல், அதாவது மோசேயின் பிரமாணத்தின்படி தேடாமல், இறுதியில் மதிகெட்டவனாக மரித்தானோ அதுபோல், இப்பிரிவினரும், தங்களின் பாவச் செயல்களுக்கு அடைக்கலம் வேண்டுமென்று அறிந்து, அது இறைவனால்தான் கூடும்மென்று தெரிந்தும், அந்த ஒன்றான மெய்த்தேவனால் கொடுக்கப்பட்ட பிரமாணத்தின்படி அதாவது பரிசுத்த வேதாகமத்தின் சட்டப்படி செய்யாமல், இறுதியில் மதிகெட்டவர்களாக மரித்துக்கொண்டுள்ளனர்.

இவர்களின் மரணத்தையெல்லாம் பார்க்கும்போது பரிதாபமாகவே உள்ளது. என்ன செய்வது? தாவீதைப் போல நாமும் புலம்புவதைத் தவிர வேறு வழி தெரியவில்லை. அப்னேர், மோசேயின் பிரமாணத்தின்படி செய்யத் தவறியது போல், இவர்களும் தங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ள வேத பிரமாணத்தின்படி செய்ய மறுத்து, மதிகெட்டவர்களின் பட்டியல் முடிந்துவிடக் கூடாது என்று கங்கனம் கட்டி காரியமாற்றுகின்றனர்.

## II ஒலிமுகவாசலும், இன்றைய கிறிஸ்தவமும்.

இன்றைக்கு, பெரும்பாலான உலக மக்களின் அங்கீகாரத்தைப் பெற்றிருக்கிற நடைமுறைக் கிறிஸ்தவத்தைக் நாம் கவனித்து, அவர்களின் செயல்பாடுகளை சற்று உற்றுநோக்கின். இன்னொரு திடுக்கிடும் உண்மை தெரியும். அது, இன்றைய கிறிஸ்தவத்தையும், ஒலிமுகவாசலையும், கண்டிப்பாக நாம் ஒப்பிட முடியுமென்பதுதான்.

எப்படி அப்னேர், தன்னைப் பாதுகாக்கும் பலம்கொண்ட ஒலிமுக வாசல் வரை வந்தும், தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியாமல், மதிகெட்டவனாக மரித்துப் போனானோ, அதுபோல், இன்றைய கிறிஸ்தவச் சமுதாயமும், ஒலிமுக வாசல் வரை பிரயாசப்பட்டு வந்தும், பரிதாபமாக தங்களை மாய்த்துக் கொண்டுள்ளது. ஒருவேளை, அடைக்கலபட்டணமாகிய எப்ரோன் வரை வந்தும் ஒலிமுக வாசலைக் கண்டுபிடிக்காமலே மரித்துப்போகும், மற்ற மதத்தாரைக் காட்டிலும் பரவாயில்லையேயொழிய, மற்றபடி இவர்களை மதியுள்ளவர்கள் என்று சொல்லிவிடமுடியாது.

அது எப்படி என்கிறீர்களா? உலகத்தால் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுகிறவர்கள் யார்? அவர்கள் உன்னதத்திலுள்ள ஒன்றான மெய்த்தேவனை அறிந்தவர்கள். அவர் தான் இயேசுவை பூமிக்கு அனுப்பினார் என்றும், இயேசுவையல்லாமல் இரட்சிப்பு இல்லையென்பதும் இவர்களுக்குத் தெரியாதல்ல. அது மாத்திரமல்ல, பரிசுத்த ஆவியானவரைக் கொண்டு கொடுக்கப்பட்ட வேத வசனங்களின்படி வாழ்ந்தால் தான், மறுமையைச் சுதந்தரிக்க முடியுமென்பதும் இவர்களுக்கு விளங்காததல்ல. சொல்லப்போனால், மேற் சொன்ன காரியங்களை ஓரளவிற்காகிலும், விசுவாசித்து, அதன்படி செய்யவேண்டுமென்ற ஆர்வம் கொண்டு, அதற்காகத் தங்களை ஒப்புக்கொடுத்தும், ஒப்புக்கொடுக்க விரும்பியும் வாழ்கிறவர்கள் இவர்கள்.

இந்த நம்பிக்கையினடிப்படையில் வாழ்வதால், இன்றைய கிறிஸ்தவம் எப்ரோனுக்கு வந்ததோடு நிற்காமல், ஒலிமுகவாசல் வரை வந்து விட்டது. ஆனால், பிரச்சினை என்னவென்றால், அப்னேர், எப்படி ஒலிமுகவாசலுக்கு வந்ததே தன்னுடைய பாதுகாப்புக்குப் போதுமானதென்று நம்பி, உள்ளே செல்லாமல் நின்று, யோவாபால் சமயம் பார்த்து வஞ்சிக்கப்பட்டு

கொலைசெய்யப்பட்டு, மதிகேடனைப்போல் மரித்துவிட்டான் என்று பெயர் எடுத்தது போல, இன்றைய கிறிஸ்தவர்களும், தங்களுடைய மார்க்க நம்பிக்கையினடிப்படையில் நித்திய பாதுகாப்புக்கு மிக அருகாமையிலே வந்தும், பிசாசனவனால் பாரம்பரியம், அற்புதம், அடையாளம், ஆவி என்பவைகளால் கடுமையாக வஞ்சிக்கப்பட்டு, அதற்குள்ளாக சென்று தங்களைப் பாதுகாத்துக்கொள்ளாமல், மதிகேடர்களாக மரித்துக்கொண்டுள்ளார்கள்.

தாங்கள், பாதுகாப்பாக இருக்கிறோமென்ற "தவறான நினைப்புதான்" தாங்கள் இழந்துபோவதற்கு காரணமாயிருக்கிறதென்ற ஒரு பெரும் உண்மை, ஏனோ இவர்களுக்கு விளங்கினபாடில்லை. மிக நெருங்கியும், வெகு தூரத்திலேயே இருக்கிறார்கள்.

## III அடைக்கலப் பட்டணமும், கிறிஸ்துவின் சபையும்

அப்னேரின் சம்பவத்திலிருந்து நாம் பார்க்கும் மூன்றாவது ஒப்பிடுதல், அடைக்கலப் பட்டணமும், கிறிஸ்துவின் சபையும்.

அடைக்கலப்பட்டணம், தேவனால், அவருடைய அநந்த ஞானத்தைக்கொண்டு, அவருடைய ஜனங்களின் நலனுக்காக திட்டமிடப்பட்டு, ஏற்படுத்தப்பட்டதைப்போல, (யாத் 21:13). கிறிஸ்துவின் சபையும் உலகத்தின் மக்களுக்காக பரலோகத்தின் தேவனுடைய அநந்த ஞானத்தின்படியாக ஏற்படுத்தப்பட்டது. (மத் 16:18) "...உன்னதங்களிலுள்ள துறைத்தனங்களுக்கும், அதிகாரங்களும், அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக..." (எபே. 3:10), இன்னும் அந்தப் பட்டணத்திற்குள்ளாக யார் செல்லவேண்டும், எப்படிச் செல்ல வேண்டும், எதற்காகச் செல்ல வேண்டும், எப்பொழுது செல்ல வேண்டும், செல்கிறவனுக்கு கிடைக்கும் நன்மைகள் என்ன என்பவைகள். தேவனுடைய தாசனாகிய மோசேயைக் கொண்டு வெளிப்படுத்தப்பட்டது போல, (யோசுவா 20:4-6), அவருடைய சபைக்குள்ளாக யாரெல்லாம் செல்ல முடியும், எப்படிச் செல்ல முடியும், எப்பொழுது செல்ல முடியும், செல்கிறவர்களுக்கு கிடைக்கும் ஆசீர் வாதங்கள் என்ன என்பவைகள் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைக் கொண்டு தெளிவான முறையில் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் என்ன நடக்கிறது? மோசையைக் கொண்டு கொடுக்கப்பட்ட பிரமாணத்தை அறிந்திருந்து, அதன்படி செய்யவேண்டுமென்று ஆசை கொண்டு, அதன்படி செய்ய முயற்சித்து, கிட்ட நெருங்கி ஒலிமுகவாசல் வரைவந்தும், வெளிப்படுத்தப்பட்ட உபதேச சட்டத்திற்கு தன்னை முழுமையாக ஒப்புக்கொடுக்க தவறி, அடைக்கலப்பட்டணத்திற்குள் பிரவேசியாமல், அப்னேர் தன்னை அழித்துக்கொண்டது போல, இன்றைய கிறிஸ்தவமும், தன்னுடைய விசுவாசத்தினிமித்தம், தேவபக்தி என்ற ஒலிமுக வாசல்வரை வந்தும், தனக்கு

நித்திய பாதுகாப்பை தரக்கூடிய அடைக்கலப்பட்டணமாகிய கிறிஸ்துவின் சபைக்குள் அதற்கான உபதேச சட்டத்தின்படி பிரவேசிக்க மனமி ல்லாமல் காத்துக்கிடந்து,, யோவாப் என்னும் பிசாசானவனால், வஞ்சிக்கப்பட்டு தங்களையுமறியாமல் தங்களை அழித்துக் கொண்டுள்ளனர்.

வேதவசனம் சொல்லுகிறதை தயவுசெய்து கவனியுங்கள். "மேலும் ஒருவன் மல்யுத்தம் பண்ணினாலும், சட்டத்தின்படி பண்ணாவிட்டால் முடிசூட்டப்படான்" (II:தீமோ.2:5). மல்யுத்தம் செய்கிறவனே சட்டத்தின்படி செய்வது அவசியமானால், வாடாத ஜீவ கிரீடத்தைப் பெற விரும்பும் ஒருவன், புதிய ஏற்பாட்டு உபதேசத்தில் எவ்வளவு கவனமாக இருக்க வேண்டும் என்பதை மறந்துவிடாதீர்கள்.

அருமையானவர்களே! தேவன் படைத்த அடைக்கலப்பட்டணமாகிய கிறிஸ்துவின் சபைக்குள் ஒருவன் செல்லவேண்டுமானால், விசுவாசித்து, (மாற்கு.16:16), மனந்திரும்பி, (அப். 2:38) அறிக்கையிட்டு (ரோமர். 10:9,10), பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவேண்டும். (அப்.22:16). இந்த வசனங்களின்படி நாம் செய்யாவிட்டால் நாம் இன்னும் ஒலிமுகவாசலில் நின்று, இறுதியில் மதிகேடர்களாக மரிப்பவர்களாகவே இருப்போம்.

தேவனுடைய அநந்த ஞானத்தின்படி திட்டமிடப்பட்டு கொடுக்கப்பட்ட அடைக்கலப்பட்டணத்தை, அவருடைய ஜனங்கள் பெரிதாக பயன்படுத்தியதாக வேதாகமத்தில் அதிகம் காணோம். அதுபோலவே தான், இன்றைக்கும், தேவனால் திட்டமிடப்பட்டு, அவருடைய குமாரனால் இரத்தம் சிந்தி வாங்கப்பட்ட கிறிஸ்துவின் சபையையும் அநேகம்பேர் நாடுவதாகத் தெரியவில்லை. ஆனால், தேவனைப் பொறுத்தளவில், அவருடைய உபதேசத்தில் அவர் தெளிவானவராக மாத்திரமல்ல, கறாரானவராகவும் உள்ளார். இதோ வசனம். "பரலோகத்திலிக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை" (மத்.7:21)

ஆகையால், எனதருமை வாசகரே! நாம் ஒவ்வொருவரும், அடைக்கலம் தேடி வருகிறவராக இல்லாமல், இன்னும் ஒலிமுகவாசல் வரைக்கும் வருகிறவராகவும் இல்லாமல், அதற்குள்ளாக பிரவேசித்து நம்மை பாதுகாத்துக் கொள்கிறவர்களாக இருப்போமாக!

நீங்கள் எப்படி மரிக்கப்போகிறீர்கள் என்ற கேள்வி ஏன் உங்களிடம் கேட்கப்பட்டதென்று இப்பொழுது உங்களுக்குப் புரிந்திருக்குமாதலால், அதற்கு என்ன பதில் சொல்லுகிறீர்கள்? கண்டிப்பாக மதிகேடரைப் போல மரிக்கும் நிலை நம் யாருக்கும் வரவேண்டாம். சர்வஞானம் உள்ள தேவனால் படைக்கப்பட்ட நாம் மதிகேடர்களாக இருக்கக் கூடாது தானே ஆகவே, அப்படி மரிக்காதிருக்க பரலோகத்தின் தேவன் நமக்கு இரக்கங்காட்டுவராக!

**S. ராஜநாயகம்**

# சபையில் பெண்களின் பங்கு

"நீங்கள் இருக்குமிடத்தில் கிறிஸ்துவின் சபையை ஆரம்பிப்பது எப்படி?" என்பதே நம் தொடர்பாடத்தின் மையக் கருத்து. நீங்கள் இருக்குமிடத்தில் சபை இல்லாதிருந்தால், அது கண்டிப்பாக தேவைப்படுகிறது என்பதையே இத்தலைப்பு நமக்குச் சுட்டிக்காட்டுகிறது. நீங்கள் சபையின் அங்கத்தினராயிருந்தால் சபையை ஆரம்பிப்பதில் முன்னின்று வழிநடத்தலாம். ஒருவேளை, நீங்கள் அங்கத்தினராயில்லாதிருந்தால், முதலில் கர்த்தருக்கு கீழ்ப்படியவேண்டியது அவசியம். அதன் பின்பு நீங்கள் சபை ஆரம்பிக்கும் பணியை தொடங்கலாம். உங்களின் நிலைமையை குறித்து எங்களுக்கு தெரியப்படுத்தினால், உங்களோடு சேர்ந்து பணி செய்ய ஆவலாய் காத்திருக்கிறோம்.

இம்முறை நமது பாடத்திற்காக "சபையில் பெண்களின் பங்கு" குறித்து படிக்கபோகிறோம். நீங்கள் இருக்கும் இடத்தில் சபையை ஆரம்பிப்பது எப்படி என்பதை குறித்து சொல்லும்போது, படிக்கும் நீங்கள் ஒரு முதிர்ந்த பெண்ணாகவோ, அல்லது வாலிப பெண் பிள்ளையாகவோ இருக்கலாம். ஒருவேளை அப்படியிருந்தால், இந்தவிசயத்தில் நீங்கள் என்ன செய்யமுடியும்? நாம் படிக்கயிருப்பது போல, நீங்கள் அநேக காரியங்களை செய்யலாம். ஆனால் முதலாவது, சபை என்று வரும்போது பெண்களின் பங்கு என்ன என்பது குறித்து வேதாகமம் என்ன வலியுறுத்துகிறது என்பதைக் குறித்துப் பார்ப்போம்.

பெண்கள் விடுதலை இயக்கங்கள் என்றெல்லாம் இருக்கும் இந்த நவநாகரீக உலகில், சபையில் பெண்கள் இந்த பணிகளை மட்டுமே செய்ய வேண்டும் என வரையறுக்கப்பட்டுள்ளது என்றோமானால், சிலர் உடனே கொதித்தெழுந்து நமக்கு ஆண் ஆதிக்கமுடையவர்கள், பெண்ணை வெறுக்கிறவர்கள், முதன்மையாக திகழவேண்டும் என்பதில் மூட ஆர்வம் கொண்டவர்கள் என்றெல்லாம் முத்திரை குத்திவிடுகிறார்கள். இது மார்க்க விஷயத்திலும் மற்ற எல்லா காரியங்களிலும் உண்மையான ஒன்றாயிருக்கிறது. அநேக பிரிவு சபை நண்பர்கள், பெண்களை தலைவர்களாகவும், பிரசங்கிகளாகவும், இன்னும் பல முன்னணி காரியங்களிலும் ஈடுபட அனுமதித்திருக்கிறார்கள். ஆனால், இதில் நாம் நமது விருப்பு, வெறுப்புக்கோ , உலகம் எப்படி நம்மை பார்க்கிறதென்பதற்கோ, அல்லது இன்னும் பல காரியங்களுக்கோ கவலைப்பட வேண்டிய கட்டாயமில்லை. மாறாக, இந்தக் காரியத்தை குறித்து வேதாகமம் என்ன போதிக்கிறது என்பதை மட்டுமே நாம் கருத்தில் கொள்ள வேண்டும். இதில்தான் நாம் ஆர்வமாயிருக்கிறோம்,

வேதாகமம் என்ன போதிக்கிறது என்பதை அறிந்தவுடன் அதையே நாம் இறுதியான ஒன்றாக ஏற்றுக் கொள்ளவேண்டும்.

தேவன், ஆணையும், பெண்ணையும் சிருஷ்டித்தார் என்பதை புரிந்து கொள்ளுங்கள். அவர் ஒருவரை ஆணாகவும், மற்றொருவரை பெண்ணாகவும் படைத்தார். அதில் ஒருவர் தகப்பனாகவும், மற்றொருவர் தாயாகவும் செயல்படுகிறார்கள். நாம் இதை ஏற்றுக்கொள்கிறோம். அப்படித்தானே? ஒரு பெண், தகப்பனாக ஒரு குழந்தைக்கு இருக்கவேண்டுமென்று நினைப்பதோ அல்லது ஒரு ஆண், குழந்தையை பெற்றெடுக்க வேண்டுமென்று நினைப்பதோ எவ்வளவு அபத்தமாயிருக்கும். தேவன் அவர்களுக்கென்று ஒரு செயல்பாட்டை வரையறைந்திருக்கிறார். அவர்கள் அதை மாற்றவேண்டுமென்று எவ்வளவு ஆசையும், ஆவலும் கொண்டாலும் அவர்களால் அது முடியாத ஒன்று. உண்மையென்னவென்றால், தேவன் கொடுத்த பங்கை நாம் சந்தோஷத்துடன் செய்ய வேண்டும். ஆணின் பங்கு முக்கியம், அதுபோலத்தான் பெண்ணின் பங்கும், ஒருவர் இல்லாமல் மற்றொருவர் ஒன்றும் செய்யலாகாது.

வேதாகமம் தேவனை பிதா (தகப்பன்) என்று பறைசாற்றும்போது, அவரை பெண்மைப்படுத்துவது எவ்வளவு அர்த்தமற்ற காரியம் பாருங்கள். இயேசுவை பெற்றெடுத்த மரியாளின் பங்கை யார் மாற்றியமைக்க முற்படமுடியும்? இவைகள் எல்லாம் அறிவற்ற காரியங்கள் மற்றும் இவைகளை மனுஷனுக்கும் மனுஷிக்கும் பிரிவினை உண்டாக்கும் கருவியாய் சாத்தான் மிக மகிழ்ச்சியாய் பயன்படுத்துகிறான், அதன் விளைவாக இருவரும் ஒருவரையொருவர் மனதளவில் காயப்படுத்துகிறார்கள்.

ஆண், பெண் என்று வரும்போது அநேக காரியங்களில் பாகுபாடின்றி சரிநிகர் சமமாக நடத்தப்பட வேண்டும். உலகின் பல பகுதிகளிலும், பிரபலமான மதவட்டாரங்களிலும், பெண் சரியாக நடத்தப்படாமல், பின்னாக தள்ளப்பட்டு, ஆணுக்கு ஒரு விளையாட்டுப் பொருளாகவே நடத்தப்படுகிறாள் என்பது உண்மை. அநேக காரியங்களில், நமது பார்வையிலிருந்தே அவள் அகற்றப்படுகிறாள், ஒன்றுக்கும் உரிமையில்லை, கடவுளை தொழுமிடத்திற்கு, பிள்ளைகளோடும், கணவனோடும் செல்லக்கூட அனுமதி இல்லை. ஆணானாலும் பெண்ணானானலும் சரி, இப்படி நடத்தப்படுவது எவ்வளவு, வேதனை தரக்கூடியதாய் இருக்கிறது பாருங்கள்.

ஆணையும், பெண்ணையும் குறித்து ஆவிக்குரிய ரீதியில் பரிசீலிக்க வேதாகமத்திற்கு நாம் செல்லும்போது, தேவன் ஒவ்வொருவருக்கும் தனித்துவம் வாய்ந்த பங்குகளை கொடுத்திருக்கிறார் என்பதை காணலாம். இந்த பங்குகள்

ஒன்றோடொன்று இணையான முக்கியத்துவம் வாய்ந்தவை. ஆனால் தேவன் ஆணையும், பெண்ணையும், ஒருவருக்கொருவர் எதிராக படைக்கவில்லை; தலைமைக்காகவும், பொறுப்புக்காகவும், ஒருவரோடொருவர் போட்டிபோடக்கூடிய சூழ்நிலையில் அவர்களை தேவன் வைக்கவில்லை.

உதாரணமாக, கர்த்தர் பிரதான கட்டளையை கொடுத்தபோது, அவர் முதலாக அப்போஸ்தலரிடம் (எல்லாரும் ஆண்கள்), உலகமெங்கும் போய் சுவிசேஷத்தை எல்லோருக்கும் பிரசங்கிக்க வேண்டுமென்ற கட்டளை கொடுத்தார். (மாற்கு. 16 : 15, 16). ஆதித் திருச்சபையை வழிநடத்தவும், பரிசுத்த ஆவியானவரின் வரத்தை பெறவும் அவர்களிடம்தான் வாக்குத்தத்தம் செய்யப்பட்டது. (அப். 2). பிறகு, பவுல் பிராந்திய சபையில் மூப்பருக்கும், உதவிக்காரர்களுக்கும், தேவையான தகுதிகளை கொடுத்தார் (1. தீமோ. 3; தீத்து. 1). மீண்டும் ஆண்கள் மாத்திரமே மூப்பராகவும், உதவிக்காரராகவும் செயல்படமுடியும்.

அப்படியென்றால் இவைகளெல்லாம், தேவன் சபையிலோ அல்லது பொதுவாகவே பெண்களை குறைத்து மதிப்பிட்டிருக்கிறார் என்று பொருள்தருமா?அவள் முக்கியமானவள் அல்ல என்று அர்த்தமாகுமா? கண்டிப்பாக அப்படியல்ல, உண்மையில், பெண்களின் பங்கு மிக முக்கியம், அநேகர் ஒப்புக் கொள்வதை விட அது அதிக முக்கியம் வாய்ந்தது. ஆண்கள் செய்யும் எல்லா வேலையும் செய்தால்தான் அவள் முக்கியமாவாள் என்ற நினைப்பு வரும்போது, அவள் அந்த வேலைகளை செய்யமுடியவில்லை என்கிற போது, உடனடியாக அவளை நாம் மாறுபட்ட கோணத்தில் பார்க்க ஆரம்பிக்கிறோம். அது அவளை அநேகருடைய பார்வையில் மதிப்பு குறைய செய்கிறது. ஆனால் நாம் பெண்களை அப்படி எவ்வேளையிலும் பார்க்கலாகாது.

தொட்டில் ஆட்டுகிற பெண் உலகாள்கிறாள் என்ற பழமொழி உண்டு. அதாவது பெண், பிள்ளை பெற்று அவர்களை ஒழுங்குபடுத்த இவளுக்குத்தான் அதிக வாய்ப்புண்டு, ஆகவே தான் பிள்ளை மூலம் அவள் உலகாள்கிறாள் என்கிறார்கள். ஒவ்வொரு பிரதமருக்கும், ஜனாதிபதிக்கும் தலைவருக்கும் அல்லது வேறு யாருக்கும் ஒரு தாயுண்டு. அதில் மிகச் சிறந்தது எதுவென்றால், தேவனின் சித்தப்படி பிள்ளைகளை வளர்த்து, அவர்களை, கிறிஸ்தவர்களாகவும், தலைவர்களாகவும், சபையில் முக்கியஸ்தர்களாகவும் உண்டாக்கும் வலிமை படைத்தவள் இந்தப்பெண். மற்றும் அவள் இப்படி உலகை நன்மைக்காக மாற்றியமைக்க முடியும்

பெண்கள் சபையில், பிரசங்கியாகவோ, மூப்பராகவோ, உதவிக்காரராகவோ இருக்கமுடியாதென்பது உண்மைதான். அவள் ஆராதனை வேளையிலும் அமைதலாய் இருக்க வேண்டும். அதாவது அதிகாரத்தை தன் கையில் எடுத்துக்கொண்டு ஆராதனையை முன்னின்று நடத்தமுடியாது. (1. கொரி. 14 : 28; 1. தீமோ. 2 : 11, 12). ஆனால் இது, அவர்கள் சபையில் பாடுவதை தடைசெய்கிறது அல்லது வேத ஆராய்ச்சி வகுப்புகளில் அவர்கள் வினா தொடுக்க தடைசெய்கிறது என்றோ அர்த்தமாகாது. ஆனால் இது, அவர்கள் ஆராதனையை அல்லது ஜெபக்கூட்டத்தை நடத்துகிறவரை மதிக்கவேண்டும் என்று அர்த்தம் தரும்.

பவுல் தேவனால் அருளப்பட்டு இப்படி எழுதுகிறார். "ஆகையால் இளவயதுள்ள விதவைகளிருந்தால், அவர்கள் இவர்களுக்கு உதவி செய்யக்கடவர்கள், சபையானது உத்தம விதவைகளானவர்களுக்கு உதவி செய்ய வேண்டியதாகையால் அந்தப் பாரத்தை அதின்மேல் வைக்கக்கூடாது". (1. தீமோ. 5 : 14) மீண்டும் அவர் இப்படி சொன்னார். முதிர்வயதுள்ள ஸ்திரீகளும் அப்படியே பரிசுத்தத்துக்கேற்றவிதமாய் நடக்கிறவர்களும் அவதூறு பண்ணாதவர்களும், மதுபானத்துக்கு அடிமைப்படாதவர்களாயிருக்கவும், தேவவசனம் தூஷிக்கப்படாதபடிக்கு பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷரிடத்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர்களும், வீட்டில் தரித்திருக்கிறவர்களும், நல்லவர்களும், தங்கள் புருஷருக்கு கீழ்ப்படிகிறவர்களுமாயிருக்கும்படி, அவர்களுக்குப் படிப்பிக்கத்தக்க நற்காரியங்களைப் போதிக்கிறவர்களுமாயிருக்கவும் முதிர்வயதுள்ள ஸ்திரீகளுக்குப் புத்திசொல்லி, ( தீத்து. 2 : 3- 5). பேதுரு இப்படியாய் புத்தி சொல்லுகிறார். அந்தப்படி மனைவிகளே, உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள், அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால், பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக் கொள்ளப்படுவார்கள். மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக் கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக் கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றது. இப்படியே

பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரீகளும் தங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள். அந்தப்படி புருஷர்களே, மனைவியானவள் பெலவீன பாண்டமாயிருக்கிறபடியினால், உங்கள் ஜெபங்களுக்குத் தடைவராதபடிக்கு, நீங்கள் விவேகத்தோடு அவர்களுடனே வாழ்ந்து, உங்களுடனே கூட அவர்களும் நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களானபடியினால், அவர்களுக்குச் செய்ய வேண்டிய கனத்தைச் செய்யுங்கள். மேலும், நீங்களெல்லாரும் ஒருமனப்பட்டவர்களும், இரக்கமுள்ளவர்களும், சகோதரசிநேகமுள்ளவர்களும், மனஉருக்க முள்ளவர்களும், இணக்கமுள்ளவர்களுமாயிருந்து, தீமைக்கு தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல், அதற்குப் பதிலாக, நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக் கிறவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள். (I. பேதுரு 3 : 1-9).

பவுல், கிறிஸ்துவையும், சபையையும், கணவனுக்கும், மனைவிக்கும் ஒப்பிட்டு பேசுகிறார். "மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள். கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான். அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார். ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறது போல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும். (எபே. 5 : 22-25).

நீங்கள் இருக்குமிடத்தைப் பற்றி சிந்திக்கையில், ஒருவேளை, நீங்கள் பெண்ணாக இருந்து, ஒரு சபையை ஆரம்பிக்க முற்பட்டால், உங்களால் என்ன பங்காற்றமுடியும்? நீங்கள் பலதரப்பட்ட மக்களோடு வேதத்தை படிக்கவேண்டும், யாராவது ஒருவர் தேவனுக்கு கீழ்ப்படிவார்கள் என்ற நம்பிக்கையோடு இதை செய்யவேண்டும். ஒரு பெண்ணாக இருந்து மற்ற பெண்களை மனமாற்றமடையச் செய்தீர்கள் என்றால், அவர்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்கலாம். ஆண்கள் சபையின் அங்கத்தினராகிற வேளையில் அவர்கள் ஆராதனையை முன் நின்று நடத்தலாம். பெண், பெண்கள், மற்றும் சிறுபிள்ளைகள் வகுப்பு நடத்தவே ஆண்டவரால் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். தனிப்பட்ட ரீதியில் ஒரு பெண், ஆணுக்கும், பெண்ணுக்கும், போதிக்கலாம். நாம் பார்த்த இந்தக் காரியங்கள் உங்களுக்கு பிரயோஜனமாய் இருந்திருக்கும் என நம்புகிறேன். மீதிகாரியங்களை தொடர்ந்து அடுத்த மாதம் பார்ப்போம்.

J.C. சோட்.

**காங்கயம் கிறிஸ்துவின் சபையாரும்,**
**உலக வீடியோ வேதாகமக் கல்லூரியும்**
**இணைந்து நடத்திய இரண்டாவது வேதாகம கருத்தரங்கிற்காக**
**ஜெபித்த உங்களுக்கு நன்றி.**

*கீழ்க்கண்ட தலைப்புகளின் கீழாக, தேவ தாசர்கள், ஆழமான முறையில் கருத்துக்களைப் பகிர்ந்தளித்தனர்.*

**18-10-1999 திங்கள்**

| கருத்தாளர்கள் | கருத்துக்கள் | |
|---|---|---|
| சகோ. K.M. பிலிப் (பவானி) | எழுந்து கட்டுவோம் வாருங்கள் | (நெகே. 2:18) |
| சகோ. ரைலே மேக்கன் (அமெரிக்கா) | நீ ஆயத்தப்படு... ஆயத்தப்படுத்து | (எசேக் 38:7) |
| சகோ. P. பால்ராஜ் (திருச்சி) | நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறது போல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள் | (I கொரி 11:1) |

| | | |
|---|---|---|
| சகோ. E.A ஆறுமுகம் (திண்டுக்கல்) | தேவனுடைய ராஜ்யத்தையே தேடுங்கள் | (லூக். 12:31) |
| சகோ. பீட்டர் சாலொமோன் (சென்னை) | தேவனுடைய ராஜ்ஜியம் பேச்சிலல்ல, பெலத்தில் | (I கொரி 4:20) |

**19-10-1999**

| | | |
|---|---|---|
| சகோ. G. தானியேல் (சென்னை) | எழும்பிப் பிரகாசி உன் ஒளி வந்தது | (ஏசா 60:1) |
| சகோ. தாமஸ் டேவிட் (பாளையங்கோட்டை) | உங்கள் இரட்சிப்பு நிறைவேற பிரயாசப்படுங்கள் | (பிலி. 2:12) |
| சகோ. தானியேல் துரைராஜ் (திருச்சி) | உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் | (ரோ. 12:2) |
| சகோ. S. ராஜநாயகம் (காங்கயம்) | அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும்... | (யோவா 17:21) |
| சகோ.டக்ளஸ் (பெங்களூர்) | நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது | (சங். 119:71) |
| சகோ.. தேவதானம் (சென்னை) | அதன் பின்பு முடிவு உண்டாகும் | (I கொரி 15:24) |

இக்கருத்தரங்கம் வருடந்தோறும் நடைபெற தொடர்ந்து ஊக்கமாய் ஜெபியுங்கள்

# "மீண்டும் ஞானஸ்நானம் இது ஒரு பாவமா?"

அடுத்தடுத்து ஒவ்வொரு ஞாயிறுதோறும் ஆராதனைக் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது. ஞாயிறு மாலையில் வேதாகமப் பாட வகுப்புக்காகவும், சில ஆலோசனைகள் செய்யும்படியாகவும் கூடிவர தீர்மானிக்கப்பட்டது.

தங்கள் அலுவலகத்தில் மதிய உணவு இடைவேளையில் ஆண்ட்ரூவும், ஜானும் ஒன்றாக சேர்ந்து படிக்க ஆரம்பித்தார்கள். அத்தோடு மற்றவர்களையும் தங்களோடு அடிக்கடி சேர்த்துக் கொண்டார்கள். ஒரு குறிப்பிட்ட நாளில் ஜானிடம் வழக்கத்திற்கும் மாறான ஆவல் தெரிந்தது.

"ஆண்ட்ரூ நாம் படித்ததை ஒத்துக் கொள்கிறேன்" ஆனால் செய்வதற்கு எது சரியான காரியம் என்று எனக்கு விளங்கவில்லை. நான் ஏற்கனவே ஞானஸ்நானம் எடுத்துள்ளேன். நான் அதுதான் சரியானதென்று நம்பியிருந்தேன். ஆனால் நீ எபேசியர் 4 : 5-ல் உள்ள ஒரே தேவன், ஒரே நம்பிக்கை, ஒரே ஞானஸ்நானம் இவைகளைப் பற்றிக் கூறினபோது நான் முற்றிலுமாகக் குழம்பிப் போனேன். நான் மீண்டும் ஞானஸ்நானம் எடுத்தால் அது தவறாக ஆகிவிடாதா?"

'அந்த ஞானஸ்நானத்தின் நோக்கம் என்னவாக இருந்தது ஜான்?" ஆண்ட்ரூ கேட்டான்.

அந்தப் போதகர் என்ன கூறினார் என்று உண்மையாகவே எனக்குத் தெரியாது. அவர் ஒரு பிரிவினை சபையின் போதகராக இருந்தபடியால், அவர்களுடைய கொள்கைப்படி தான் போதித்திருப்பார். அந்தப் போதனையைப் பற்றிய ஒரு தெளிவும் எனக்கு இல்லை. ஏதோ சில வாக்குறுதிகளைச் செய்யச் சொன்னார்கள்: பிறகு நாங்கள் எல்லோரும் ஞானஸ்நானத்திற்காக ஜெபித்தோம் என்பது எனக்கு நினைவிருக்கிறது. என்னுடைய பாவங்கள் எல்லாம் இயேசுவின் இரத்தத்தினாலே கழுவப்படுகிறது என்று சொன்னார்களா என்று கூட எனக்குத் தெரியாது. அந்த நேரத்தில் இருந்து இரட்சிக்கப்பட்ட மனிதன் என்று நானே நினைத்துக் கொண்டேன் என்பது மட்டும் எனக்குத் தெரியும்".

வசனத்தில், நாம் குழுவாக சேர்ந்து பார்த்தபடி, யோவான் ஸ்நானகன், இயேசு கிறிஸ்து பிறகு அப்போஸ்தலர்கள் போன்றவர்கள் தொடர்ந்து ராஜ்யம் சமீபமாய் இருக்கிறதென்று போதித்தார்கள். அவரது சபை - அப் : 2ம் அதிகாரத்தில் ஆரம்பமான பிறகு, மக்கள் உலகத்தில் இருந்து பிரிந்து வந்து அந்த சபையில் அதாவது இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று

விசுவாசித்த மக்களோடு சேர்ந்து கொண்டார்கள். பிலிப்பு சமாரியாவுக்குச் சென்றபோது (அப். : 8ம் அதிகாரம்) அவன் இயேசுவைப் பற்றியும் ராஜ்ஜியத்தைப் பற்றியும் பிரசங்கித்தன.

ஒருவன் கிறிஸ்துவைப் பற்றிக் கேள்விப்படாமலும், அவரில் விசுவாசம் வைக்காமலும் அவரை மாத்திரம் கர்த்தர் என்று தெரிந்து கொள்ளாமலும் ஞானஸ்நானம் என்ற முறைக்காக ஏதாவது செய்திருந்தாலும் தேவன் ஒருவனுடைய பாவங்களை மன்னிப்பார் என்பதை உன்னால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? என்று ஆண்ட்ரூ கேட்டான்.

"கட்டாயம் முடியாது! ஒரு மனிதன் கிறிஸ்துவை விசுவாசிக்காமல் எடுக்கும் ஞானஸ்நானம் உண்மையான ஞானஸ்நானம் ஆகாது" ஜான் சீக்கிரமாக பதிலுரைத்தான்.

சபை என்பது ஒரு குறிப்பிட்ட மக்களின் கூட்டமும், வாழ்க்கை முறையில் தங்களைச் சுற்றிலும் உள்ள உலகத்தில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட மக்களுமாகும். இது தனக்குத்தானே ஒரு ராஜ்ஜியமாகும்.

"நீ ஞானஸ்நானம் பெற்றபோது, இயேசுகிறிஸ்துவை இரட்சகர் என்று விசுவாசித்தாயா?"

"இருக்கலாம்" ஜான் சிரித்தான்.

"இரண்டாம் கேள்வி" ஆண்ட்ரூ தொடர்ந்தான். பிலிப்பு சமாரியா பட்டணத்தில் ராஜ்ஜியத்தைப் பற்றி பிரசங்கித்ததுபோல் நீ தேவனுடைய சபையைப் பற்றி ஞானஸ்நானம் எடுக்கும்போது கேள்விப்பட்டாயா? எல்லாவற்றையும் உதறி தள்ளிவிட்டு கிறிஸ்துவின் சரீரத்திற்குள் ஞானஸ்நானம் பெற்றாயா? யாராவது ஒருவர் I கொரி : 12 : 13ம் வசனத்தைக் காட்டினார்களா? "...... எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டோம் ......."

"இல்லை" ஜான் பதிலுரைத்தான். அந்தக் காரியங்களைப் பற்றியெல்லாம் அல்லது சபையைப் பற்றியும் எனக்கு ஒன்றும் தெரியாது. இவைகளைப் பற்றி கடந்த சில வாரங்களில் உன்னோடு படிக்கும்போது தான் கேள்விப்பட்டேன்.

"இல்லை" அந்தக் காரியங்கள் எது பற்றியும் அல்லது சபையைப் பற்றியும் எனக்கு முன்பு தெரிந்திருக்கவில்லையென ஜான் பதிலுரைத்தான். உன்னோடு சேர்ந்து படிப்பதால் கடந்த சில வாரங்களாகத்தான் இவை பற்றி கேள்விப்படுகிறேன். நான் இவை பற்றிக் கேள்விப்படவில்லையென்றாலும் தேவன் என்னை சபையில் சேர்த்திருக்கலாம்".

"ஆனால், அவன் உலகத்திலிருந்து உன்னை வெளிக்கொணருமாறும், அவருடைய சபையில் உன்னைச் சேர்க்கும்படியாகவும், உனக்காக அவர் ஒன்றைத் தெரிந்திருக்கலாம், அப்படிதானே?" என்றான்.

"ஆம்" எனக்குத் தெரியாததால் நான் அறிந்திருக்க முடியாது" என ஒத்துக்கொண்டான்.

"ஆனால், அவர் உன்னை அப்பொழுது அவருடைய விருப்பத்தின்படி சேர்த்துள்ளபடியாலும், இப்பொழுதுதான் நீ சபையைப் பற்றித் தெரிந்து கொள்வதாலும் நான் எந்த நிலையில் (அல்லது) எந்த சபையில் பிறந்தேனோ அப்படியே மரிக்கிறேன் - அதுவே போதும். அந்தக் குறுகின சபையில் அங்கமாக இருக்க விரும்பவில்லையென்று "சொன்னாய்"!.

"தான் அங்கமாக இருக்கும்படி தெரிந்து கொள்ளப்படாத ஒன்றில் ஒருவனைக் கொண்டுபோய்ச் சேர்ப்பது தேவன் செய்யக்கூடாத காரியம் என்று உனக்குத் தெரிகிறதா, ஜான்?

"ஆம், எனக்கு அது நன்றாக விளங்குகிறது" என்று ஜான் ஒத்துக் கொண்டான்.

இங்கே, அப்: 19ம் அதிகாரத்தில் ஒரு கூட்ட மக்களைப் பற்றிப் படிக்கலாம். அவர்கள் கிறிஸ்துவைப் பற்றிக் கேள்விப்படாமலே ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள். ஆகையால் ஞானஸ்நானம் என்ற பெயரில் அவர்கள் செய்த காரியத்தை தேவன் அங்கீகரிக்கவில்லை".

"ஆம், இங்கு வசனம் 5-ல்" அவர்கள் அதைக் கேட்டபொழுது கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள்". இங்கே "மீண்டும்" என்று கூட சொல்லவில்லை!".

ஒரு மனிதன் தேவனுக்கு கீழ்ப்படிவது வசனத்திற்கு விரோதமாக இருக்குமானால், அவன் அதை சரிசெய்து கொள்ளவேண்டும், நிச்சயமாக அங்கே ஒரே ஒரு ஞானஸ்நானம்தான் - தேவனுடைய சபைக்குள் ஒரே ஒரு முறைதான் பிறப்பு! அநேகமாக மக்கள் தவறாக போதிக்கப்படுகிறார்கள். அவர் இரட்சிக்கப்படாமலிருந்தாலும் இரட்சிக்கப்பட்டாயிற்று என்று நம்புகிறார்கள். ஜான், இப்பொழுது நீ புரிந்திருப்பாய் நாம் எப்படி இரட்சிக்கப்படுகிறோம் என்று. ஞானஸ்நானம் என்பது புதியதாக பிறப்பது. அது நம்மை கிறிஸ்துவுக்குள், அவரது சபைக்குள் சேர்க்கிறது. நீ உண்மையாகவே வசனத்தின்படி ஞானஸ்நானம் எடுக்க முடியும்" என்று ஆண்ட்ரூ வலியுறுத்துகிறான்.

"நான் அதை செய்ய விரும்புகிறேன்" ஜான் பதிலுரைத்தான். " நீ எனக்கு ஞானஸ்நானம் கொடுக்க முடியுமா, ஆண்ட்ரூ?"

**B.B. CHOATE.** **R.R. NAYAGAM.**

வாலிபர் பகுதி

# முயற்சியால் பயிற்சி பெற்றோரை முறியடித்தவன்

மகத்துவமும் வல்லமையுமுள்ள மாசற்ற தேவனின் மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து, தமது மரணத்தால் பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டு பண்ணி, உன்னதருடைய வலதுபாரிசத்திலே வீற்றிருக்கிற விண்ணவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில், தங்களின் முயற்சிக்கு தடையாய் சீனப்பெருஞ்சுவர் போன்ற பிரச்சினைகள் எதிர்நின்றாலும், சிங்கங்கள் நாங்கள், சீறிப்பாய்ந்து சிதறடிப்போம்! என சூளுரைக்கும் வீரம் நிறைந்த வாலிப வாசகர்களுக்கு வாழ்த்துக்கள். உங்கள் வீரம் அநீதியை எதிர்த்து குரல் எழுப்ப, குறிப்பாக மார்க்க சம்பந்தப்பட்ட விஷயங்களுக்கென பயன்படுவதே சாலச் சிறந்தது.

அறுபத்தாறு அறைகளுள்ள மகா பெரிய அரண்மனை போன்ற வேதாகமத்தில், ஞானமுத்துக்கள் பதித்து அலங்கரிக்கப்பட்ட அறையாம் நீதிமொழிகளில், யெதிதியா என்னும் மறுபெயர் கொண்ட சாலொமோன் எழுதுகையில் "தீமையை வெறுப்பதே கர்த்தருக்குப் பயப்படும் பயம் . . ." என்கிறார். ( 8 : 13). வாலிபர்களாகிய நாம் தீமையை வெறுத்து, கற்புள்ளவர்களாகவும், நெறி தவறாதவர்களாகவும் நடப்பதே கர்த்தருக்குப் பயப்படும் பயம் என ஞானி வெளிச்சமிட்டுக்காட்டுகிறார். அவ்வெளிச்சத்தின் பாதையிலே நடக்கவேண்டும் என்பதற்காய், இஸ்ரவேலர்களுக்கு, பெலிஸ்தியரால் இழைக்கப்பட்ட அநீதியை எதிர்த்து, தீமையை வெறுத்து தேவன் ஈந்த பெலத்துடன் அவர்களை முறியடித்த "சம்காரை" பற்றி சிறிது நேரம் என்னுடன் சேர்ந்து சிந்தியுங்கள்.

**பக்தி வைராக்கியமுடையவனாகவும், விசுவாசவீரனாகவும் திகழ்ந்தவன் :**

பத்து வாதைகளை நடப்பித்து, பராக்கிரமம் கொண்ட பார்வோனின் பயங்கர பிடியிலிருந்து தேவனால் விடுவிக்கப்பட்ட இஸ்ரவேல் ஜனங்கள் மோசேயின் மறைவுக்குப் பின் யோசுவாவைக் கொண்டு தேவனால் வழி நடத்தப்பட்டு, வாக்குத்தத்த தேசமாகிய கானானை சுதந்தரித்து, யோசுவா மரணமடைந்த பின்பு ஜீவனுள்ள தேவனை மறந்து, அந்நிய தேவர்களை நமஸ்கரித்த போது நீதிபரரால் அடிமைத்தனத்திற்கு ஒப்புக் கொடுக்கப்பட்டார்கள்.

பகைவர்களால் வந்த கொடுமைகளைத் தாங்க முடியாமல்

இறைவனை நோக்கி மனந்திரும்பி முறையிட்ட இஸ்ரவேலர்களை நியாயாதிபதிகளை கொண்டு இரட்சித்தார். நித்தியரால் எழுப்பப்பட்ட நியாயாதிபதிகளின் வரிசையில் மூன்றாவதாய் தோன்றிய சம்கார் தான் இம்மாத வாலிபர் பகுதியில் வலிமையோடு நிற்பவன். வேதத்தில் இரு வசனங்களே இவனைக் குறித்து எழுதப்பட்டிருக்கிறது. நியாயாதிபதிகளின் மூன்றாம் அதிகாரம் முப்பத்தியோராம் வசனத்தில் இவனைக் குறித்து நேரடியாக விளக்கப்பட்டுள்ளது. மற்றொரு வசனத்தில் தெபொராள் என்னும் பெண் நியாயாதிபதியால் மேற்கோளிட்டு காட்டப் பட்டுள்ளது.(நியா 5:6)

"ஆனாத்தின் குமாரன் சம்கார் எழும்பினான்; அவன் பெலிஸ்தியரில் அறுநூறுபேரை ஒரு தாற்றுக் கோலால் முறிய அடித்தான்" (நியா. 3 : 31). பெலிஸ்தியர்களுக்கும் இஸ்ரவேலர்களுக்கும் இடையே ஓயாத பகை எப்பொழுதும் ஓங்கி நிற்கும் என்பதை இக்கால வரலாறு அறிந்தவர்களும் ஒத்துக் கொள்வர். அவர்தம் அடக்குமுறையைக் கண்டு சகிக்கமுடியாமல் வெகுண் டெழுந்திருக்கிறான் சாமார்த் தியனான சம்கார்.

அறுநூறு பேரை ஒரு தாற்றுக்கோலால் அல்லது எருதுகளை வழிநடத்த பயன்படும் ஒரு தடியால் முறியடித்த இவன் படையில் சேர்ந்து, கவசம் பூண்டு, கூர்வேலும், நேர்வாளும் பிடிப்பதெப்படி? குதிரையின் மீதேறி குறிப்பிட்ட இடம் நோக்கி தாக்குவதெப்படி? பகைவரின் போர்தந்திரங்களைப் பந்தாடு வதெப்படி? போன்ற போர் கலைகளில் பயிற்சி பெறவில்லை. இதை எப்படி நீங்கள் சொல்கிறீர்கள் என்கிறீர்களா? பயிற்சி பெற்றவன் தாற்றுக்கோலைக் கொண்டா போர்புரிவான்? தாற்றுக்கோல் வைத்திருந்த இவன் எருதுகளை வைத்து நிலம் உழுபவனாக இருப்பதற்கே அதிக வாய்ப்புண்டு.

பாய்ந்துவரும் பகைவரின் அம்பு இமைக்கொட்டினால் கூட நெஞ்சைப் பிளந்துவிடுமோ! ஒருவேளை அப்படி பிளந்துவிட்டால் இஸ்ரவேலர்கள் என்னை இழிமகன் என்று பழித்துவிடுவார்களோ? என்றெல்லாம் எண்ணாமல், பயிற்சி பெற்ற போர்வீரர்களை எதிர்த்து சண்டையிடும் நெஞ்சுரம் படைத்தவன் இந்த சம்கார். இதெல்லாம் இவனால் எப்படி முடிந்தது? உலகத்தை ஜெயிக்கும் ஜெயமாகிய விசுவாச மென்னும் ஆயுதம் தரித்தவனாகவும், ஒரே மெய்த் தேவன் மீது பக்தி வைராக்கியமுள்ளவனாகவும் இருந்து தேவனுடைய ஜனங்களுக்கென்று போர்புரிந்தான். இதுவே இவனை இப்பெருஞ்செயலை செய்யத் தூண்டிய இரகசியம்.

வாலிபர்களாகிய நமக்கு இவன் தரும் பாடம்தான் என்ன? உலகமே

நமக்கு எதிர்நின்றாலும் அகிலத்தை படைத்த ஆண்டவர் நம்மோடிருப்பாரானால் நமக்கு எதிர்நிற்பவர்யார்? (ரோமர் 8:31). வாலிபர்களே! என்றும் தேவன் உங்கள் பக்கம் இருக்கிறாரா என்று உங்களையே தற்பரிசோதனை செய்துபாருங்கள். என்னவந்தாலும் கருணை நாதனாம், கல்வாரி நாயகன் இயேசுவின் மீதுவைத்த அன்பை விட்டுவிடாதீர்கள். இத்தகைய விசுவாசத்தில் வளர்ந்தோங்குகின்ற வாலிபர்களாக இருந்தால், வஞ்சகப் பிசாசின் வலையிலிருந்து, அவன் எய்யும் தீப்பொறி அம்பிலிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ளக் கர்த்தர் உதவுவார் என்பதில் ஐயமில்லை. (1 கொரி 10:13)

நண்பர்களே! சம்கார் தரும் மற்றொருபாடம் என்னவென்றால், ஒரு காரியத்தை செய்யும் முன், நம் பலவீனங்களையே எண்ணி, அதனால் சோர்ந்து, செய்யும் கடமையிலிருந்து தவறிவிடக் கூடாது. மாறாக என்னால் முடிந்ததை செய்கிறேன் என்ற துணிவுடன் காரியத்தில் இறங்குங்கள். அப்பொழுதுதான் உங்களுக்குள்ளிருக்கும் சக்தி உங்களுக்கே தெரியவரும்.

**எடுத்த காரியத்திற்குத் தன்னை முற்றிலுமாய் அர்ப்பணித்தவன்:-**

தேசப்பற்றுடைய சம்கார், வேதத்திலிருந்து நமக்கு தெரிந்தவரை தன் தேசத்தாராகிய இஸ்ரவேலர்களிடமிருந்து எந்த உதவியும் பெறவில்லை. பகைவர்களை எதிர்த்துப் போரிட்டபோதும் ஒருவரும் உதவிக்கென்று வரவில்லை. பயிற்சிபெற்ற அறுநூறு பெலிஸ்தியர்கள் எங்கே? தனிமையில் நிற்கும் நமது சம்காரெங்கே! தேவன் இவனுக்கு உறுதுணையாய் இருந்தார் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

பெலிஸ்தியரின் பெரும்படை எதிர் நின்றபோதிலும், பட்டைதீட்டிய பட்டயத்துடன் பகைவர் பாய்ந்தோடி வந்தபோதிலும், பதராமல் தான் வசித்த இஸ்ரவேல் தேசத்து மக்கள் எதிரிகளின் கசையடியாலும் வசைச் சொற்களினாலும் அடிமைகள் போல் நடத்தப்படுவதைக் கண்டு அஞ்சா நெஞ்சனாய் வீறுகொண்டெழுந்தான். எழுந்தவன் பாதியில், பகைவர்களை முழுவதுமாய் அழிக்காமல் பின்வாங்கிவிடுவேனோ? அல்லது தனியே நின்று போர்புரிகிறேனே, தத்தளித்து விடுவேனோ? என்றெல்லாம் எண்ணாமல் பரமனை பக்கத் துணையாய் வைத்திருந்ததினால் இப்பெருங் காரியத்தில் முழுமையாகத் தம்மை ஈடுபடுத்தினான்.

இஸ்ரவேலின் இனிய பாடகனாகிய சங்கீதக் காரன், "உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்து போவேன்" (சங்.18:29;2.சாமு 22:30) என்று விண்ணுலகதந்தை மீது தான்

வைத்திருந்த விசுவாசத்தை வெளிப்படுத்தினான். தேவன் தன்னுடையவர்களுக்காக போராடுகிறவராகவும் மற்றும் அவர்களை திக்கற்றவர்களாக விடாதவருமாயிருக்கிறார் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. சம்கார் இந்தக் காரியத்தில் நமக்கு சிறந்த முன்னோடியாக விளங்குகிறான் என்பதில் ஐயமேதுமில்லை.

சம்கார் நமக்கு கற்றுத்தரும் மற்றொரு பாடம் என்னவென்றால் தேவன் மனிதர்களை ஏற்ற சமயத்தில் பயன்படுத்துகிறார் என்று சொல்லுகிறவனாய் மாத்திரம் நிற்காமல், அதற்கு மாறாக, "தேவனே உம்முடைய காரியத்துக்காக என்னை நீர் பயன்படுத்தும்" என்று தன்னையே முற்றிலும் அர்ப்பணித்தவனாய் திகழ்ந்தான். வாலிபர்களாகிய நாமும் நம்மை தேவனுக்கு முற்றிலும் அர்ப்பணித்தவர்களாய் மாறி அதில் உறுதியாய் இறுதிவரை நிலை நிற்கிறவர்களாய் இருக்கவேண்டும்.

இவன் தரும் இன்றியமையாத இன்னொரு பாடம் என்னவென்றால், அக்காலத்தில் பெலிஸ்தியர்களுக்கு இஸ்ரவேல் ஜனங்கள் அடிமைகளாயிருந்தார்கள். தேவ ஜனங்கள் மாற்றான்கையில் சிக்கி மாளுவதைக் கண்ட சம்காரோ பகைவரை மண்ணைக் கவ்வச் செய்து தேவனுடைய ஜனங்களை மீட்டமைத்தான். வாலிபர்களாகிய நாமும், இன்றை கிறிஸ்தவத்தைப் பிரித்து கூறுபோட்டுக்கொண்டு, எள்ளி நகையாடும் சாத்தானின் கொட்டத்தை அடக்கும்படி சம்காரைப்போல், வசனமாகிய தாற்றுக்கோலைக் கொண்டு வஞ்சகனாகிய பிசாசை முறியடிக்க வேண்டும் என்பதுதான் அப்பாடம்.

இன்றைய கிறிஸ்தவர்கள் எதிர்கொண்டிருக்கும் அபாயங்களைக் கண்டு, சிலர், யாராவது ஏதாவது செய்யமாட்டாரோ என்று கூக்குரலிடுவதுண்டு. ஆனால் இந்த சம்காரோ யாராவது ஏதாவது செய்யட்டும் என்று காத்திரமாமல் தானே காரியங்கள் முனைப்புடன் இறங்கினான். நாமும் அதைப் போல், இத்தகைய காரியங்கள் நடைபெறாமல் தேசத்தில் சமாதானம் நிலவவேண்டுமென்று வாலிபர்களாகிய நாம் இறைவனிடம் கெஞ்சி மன்றாடுவது அவசியம். நாமும் சம்காரைப் போல் தேவனுக்கென்று காரியம் ஆற்றுவதில் நம்மை முற்றிலும் அர்ப்பணித்து அதன் மூலம் தேவனுடைய ஆசீர்வாதத்தை பெறுவோமாக!

**ஜோ. பிக்கின்ஸ்**

# உலக வீடியோ வேதாகமக் கல்லூரியின் மாணவர் சேர்க்கை அறிவிப்பு

**வேதாகம முழுநேரப் பயிற்சிக்கு தங்களை அர்ப்பணிக்க வாஞ்சையுள்ள வாலிபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

| | | |
|---|---|---|
| **காலம்** | : | 3 வருடம் (செமஸ்டர் முறை) |
| **கல்வித்தகுதி.** | : | +2 தேர்ச்சி (அல்லது). பட்டப்படிப்பு (திருமணமாகாத ஆண்கள் மட்டும்) |
| **பட்டம்** | : | பி.பி.எஸ் (Bacheler of Biblical Studies) |
| **தனித்தன்மை** | : | இந்தியாவின் ஒரே வீடியோ வேதாகமக் கல்லூரி |
| **ஆசிரியர்கள்** | : | உலகெங்கிலும் பெயர் பெற்ற, தேவனுக்கென்று தங்களை அர்ப்பணித்த தேவதாசர்கள் (அமெரிக்கா) |
| **போதிக்கும் முறை** | : | வீடியோ மூலம் மொழி பெயர்ப்புடன் போதிக்கப்படுகிறது. |

***உதவித்தொகை வழங்கப்படும்.***

***மேலும் விபரங்கட்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:***

இயக்குநர்

**உலக வீடியோ வேதாகமக் கல்லூரி**

தாராபுரம் ரோடு,

காங்கயம் - 638 701.

இந்தியா

தொலைபேசி : (04257) 20030

தெரிந்து கொள்ளுங்கள்

# "கொடுத்தல்"

## பாடம் - 8

### முன்னுரை

1. நமது ஆராதனையில் மிகவும் புறக்கணிக்கப்பட்ட பகுதியாக கொடுத்தல் அமைகிறது; அநேகர் தங்கள் சொந்த இஷ்டத்தை நிறைவேற்ற தேவனை வஞ்சிக்கிறார்கள். (மல். 3 : 8). இன்னும் அநேகர் கொடுத்தலின் உண்மை அர்த்தத்தை புரிந்து கொள்ளவில்லை.
2. தேவன் எதிர்பார்க்கிற வண்ணம் கொடுத்தலைப் பற்றி புரிந்து கொள்ளவேண்டும். தேவ காரணங்களைத் தவிர வேறு காரணங்களுக்காக கொடுப்பது கீழ்ப்படியாமை (பாவம்).
   நாம் களவாடாமலும், பொய் பேசாமலும், கொலை செய்யாமலும், விபசாரம் செய்யாமலும் இருக்கலாம். ஆனால் நமது கொடுத்தலில் தேவனுக்கு கீழ்ப்படியாதவர்களாய் இருப்போமானால் பாவம் செய்கிறவர்களாயிருப்போம்.
3. கொடுத்தல் விசுவாசத்துடன் செய்யப்படவேண்டும்.
   யாக். 2 : 18-26 காணிக்கை செலுத்துவதில் ஆபிரகாமின் விசுவாசத்தை வெளிக்கொணர்கிறது.
   நமது கொடுத்தல் விசுவாசத்தையோ அல்லது மாறாக அதன் குறைச்சலையோ வெளிப்படுத்துகிறது.

### விவாதம்

**I.** தேவனின் எஜமானத்துவம் முழுமைபெற்றதும், மற்றும் மறுக்க முடியாததுமாயிருக்கிறது.

**A**. வானமும், பூமியும் அவருடையது. (ஆதி. 14 : 19 - 20; உபா. 10:14; சங். 24 : 1 சங். 89 : 11). சகலத்தையும் அவர் உண்டாக்கிய நற்பண்பினால் எல்லாம் அவருக்குச் சொந்தமாகும். (ஆதி. 1 : 1).

**B**. தேசம் அவருடையது, இஸ்ரவேலர்கள் உக்கிராணக்கார்கள். (லேவி. 25: 23). ஆகையால் ஓய்வு மற்றும் யூபிலி வருடங்களும் அவருடையது (லேவி. 25).

**C**. சகல பட்சிகளும் அவருடையது. (சங். 50 : 10 - 12) (ஆயிரம் (1,000) என்றால் முழுமை) பொன்னும், வெள்ளியும் அவருடையது. (ஆகாய். 2 : 8).

**D**. ஆத்துமாக்களெல்லாம் அவருக்குச் சொந்தம். (எசே. 18 : 4). கிரய உரிமையின் அடிப்படையில், எல்லா கிறிஸ்தவர்களும் அவருடையவர்கள் (1. கொரி. 6 : 19, 20).

## II. ஜீவனுக்கானதெல்லாம் உக்கிராணத் தன்மையுடையது.

**A**. கிறிஸ்தவர்கள் உக்கிராணக்காரர்கள். (லூக். 16 : 1-14).

**B**. உக்கிராணக்காரனுக்கான தகுதிகள்.

1. உண்மையுள்ளவனாயிருக்கவேண்டும். (1. கொரி. 4 : 1, 2. நல்லவனாயிருக்க வேண்டும். (1. பேதுரு. 4 : 10). பொருள்களை அழிக்காதவனாயிருக்க வேண்டும். (லூக். 16 : 1). கணக்கொப்புவிக்கிரவனாயிருக்க வேண்டும். (ரோ. 14 : 1).
2. தேவன் "விளைச்சலின் முதல் பலனை" காணிக்கையாக கேட்கிறார். (லேவி. 23 : 9 - 14; மத். 6 : 33).

## III. கொடுத்தல் ஒருவருக்கொருவர் பங்குபெறும் . . . ஐக்கியத்திற்குச் சம்பந்தப்பட்ட காரியம்.

**A**. அன்பில். (1. பேதுரு 1 : 22; கொலோ. 2 : 2).

**B**. உபத்திரவத்தில். (கலா. 6 : 1, 2).

**C**. சேவையில் (கலா. 2 : 10; 6 : 10).

**D**. பொருளாதாரத்தில்

1. "ஒவ்வொருவரும்" 1. கொரி. 16 : 1, 2
2. "தகுதிக்கேற்ப" 2. கொரி. 8 : 12.
3. "சமநிலையில்" 2. கொரி. 8 : 13 - 15. (சமநிலை என்பது எல்லோரும் ஒரே தொகை கொடுப்பதென்று அர்த்தமாகாது. அவனவனின் தகுதிக்கேற்ப சிறந்ததை கொடுக்கவேண்டும் என்பதாகும். (மத். 25 : 14 - 30).

## IV. கொடுத்தலின் அடிப்படையே அன்புதான்.

**A**. 2. கொரி. 8 : 1 - 5; 8 : 8 - 24.

**B**. ஒருவன் தேவனுக்கும் மற்றும் பேலியாளுக்கும் ஊழியம் செய்யகூடாது.

**C**. கொடுத்தல் நமது அன்பின் "நேர்மை அல்லது உண்மையின் அச்சாரம். (1. கொரி. 8 : 8, 24).

**D**. கொடுத்தல் "சுய விருப்பமுடையது" (2. கொரி. 8 : 12; 9 : 7).

## V. புதிய ஏற்பாட்டு கொடுத்தலின் குணாதிசயங்கள்

**A**. வாரத்தின் முதல்நாள் தோறும். (1. கொரி. 16 : 1, 2).

**B**. ஒவ்வொருவரும் தனியே (1. கொரி. 16 : 1, 2) (தனித்தனியே)

**C**. வரவுக்குதக்கதாக (1. கொரி. 16 : 2). ( "தேவன் கொடுத்த வரவினடிப்படையில்")

D. நோக்கத்திற்காக (1. கொரி 16 : 2) ( "நான் வரும்போது பணஞ் சேர்க்குலிராதபடிக்கு)

E. உற்சாகமாய் (2. கொரி. 9 : 7).

F. ஆயத்தமாய் (2. கொரி. 8 : 12).

G. தாராளமாய் (2. கொரி. 9 : 6)

H. திட்டமிட்டு (2. கொரி. 9 : 1, 2)

I. நியமத்துடன் (2. கொரி. 9 : 7).

## முடிவுரை

1. வானத்திற்கு கீழ் சபை மிகப்பெரிய வேலையில் ஈடுபட்டிருக்கிறது.
   a) எபே. 3 : 10.
   b) ஆத்துமா ஆதாயம்.
2. ஆத்தும ஆதாய வேலைக்கு பணம் ஒரு அவசியத்தேவை.
   a) யோவான். 13 : 23 - 30.
   b) கிறிஸ்தவ ஜீவியத்தில் பணத்தை சரியாய் உபயோகப்படுத்துவது ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது.
3. கிறிஸ்தவர்கள் தங்கள் உக்கிராணத்துவத்தை நினைவில் கொள்ளவேண்டும்.
   a) பணஞ்சேர்க்கும் உக்கிராணத்துவத்தை நினைவில் கொள்ளவேண்டியது என்னவென்றால் "எல்லா மனுஷர் முன்பும் ஒழுங்காய் நடக்கும் நினைவும், பணத்தை வைத்து நாம் காரியம் செய்யும்போது தேவனுடைய மகிமையை நம் மனதிலும் கொள்ள வேண்டும்.
   b) கொடுத்தல் உக்கிரணத்துவமென்றும், உக்கிராணத்துவம் சீராய் நடத்தப்படுகிறது என்பதையும் நாம் உறுதியாய் அறியவேண்டும்.
   c) நாம் கணக்கொப்புவிக்க அழைக்கப்படுவோம். (ரோமர். 14 : 12).
   d)நாம் உண்மையுள்ளவர்களாய் காணப்படவேண்டும்.(1. கொரி. 4:1, 2).

**TONEY L. SMITH.** **டோனி ஸ்மித்**

## உங்கள் கவனத்திற்கு

வாசகர்கள் விலாசம் மாறிச் செல்லும்போது, உங்கள் பழைய, புதிய விலாசங்களை ஒரு அஞ்சல் அட்டையில் எழுதி உடனடியாக எங்களுக்குத் தெரிவியுங்கள். இனிமேல், இதழ் திரும்பி வந்தால், மேற்படி விலாசதாரருக்கு இதழ் அனுப்புவ்து உடனடியாக நிறுத்தப்படும்.

*- ஆசிரியர்*

# வெளிப்படுத்தின விசேஷம்

## பின்னணி (பாகம் – 6)

வெளிப்படுத்தல் நூலுக்கான பின்னணி சம்பந்தப்பட்ட ஆறாவதும் இறுதியுமான இக்கட்டுரையில், இந்நூலில் போதிக்கப்பட்டுள்ள, சில முக்கியமான பாடங்கள் பற்றி மேலோட்டமாகப் பார்க்க உள்ளோம். இதில் போதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பாடம் பற்றியும் நாம் இங்கே விலாவாரியாகப் பார்க்க முடியாது. ஆனால், சில முக்கியமானவற்றை பார்க்க உள்ளோம். வெளிப்படுத்தல் நூலை ஒவ்வொரு வசனமாகப் பார்ப்பதற்கு முன்பாக நாம் இதைச் செய்வது, இந்நூலை படிக்கும்போது எந்த நோக்கத்தோடு அணுகி அதைப் பார்க்கவேண்டும் என்பதற்கு நம்மை ஆயத்தப்படுத்தும்.

இந்தப் புத்தகத்தில் போதிக்கப்பட்டுள்ள மிக முக்கியமானதும், உயிர்நாடியுமாயிருக்கிற பாடம் அல்லது இதன் கருத்தென்று கருதப்படுவது அல்லது முக்கிய நோக்கம் “ஜெயங்கொள்ளுதல்” ஆகும். இதற்கான கிரேக்க வார்த்தை “அனிகோவ்” (Anikao) என்பது. இதன் சொல் அர்த்தம், ஒன்றுமில்லாமல் செய் அல்லது வெற்றிகொள் என்பது. இவ்வார்த்தை ஒட்டுமொத்த புதிய ஏற்பாட்டில் 28 முறை குறிப்பிடப்பட்டிருந்தாலும், இந்நூலில் மாத்திரம் 17 முறை உள்ளது. வெளிப்படுத்தல் இரண்டு, மூன்று அதிகாரங்களில் ஆசியாவிலுள்ள ஏழு சபைகளுக்கு எழுதப்பட்டுள்ள ஒவ்வொரு நிருபத்திலும், கர்த்தரால் மிகப்பெரிய வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தப் புத்தகமானது கிறிஸ்துவின் மீது கொண்டிருந்த விசுவாசத்தினிமித்தம் பாடுகள் பல பட்டுக்கொண்டிருந்த அல்லது பயங்கரமான உபத்திரவங்களை எதிர்நோக்கியிருந்த கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டதென்பது நினைவிருக்கட்டும். இந்நூல், பாடுகளைச் சகித்து, சோதனைகளை மேற்கொள்ள உற்சாகப்படுத்தும்படியாய் அவர்களுக்கு (நமக்கும்கூட) எழுதப்பட்டுள்ளது. இந்த வாழ்க்கையில் நித்திய ஜீவன் என்ற வெகுமதி நமக்கு காத்திருக்கிறது என்று இந்த வெளிப்படுத்தல் நூல் நமக்கு தெளிவாகக் காட்டுகிறது. அதே நேரத்தில், ஜெயங் கொள்ளாதவர்களுக்கு, நித்திய ஆக்கினை காத்துக் கொண்டிருக்கிறதென்று நம்மை எச்சரிக்கவும் செய்கிறது.

ஜெயங்கொள்ளுதல் என்பதற்கு சரியான சான்றாக இயேசு விளங்குகிறார். சிலுவையில் மரிக்கும் பரியந்தம், அவர் நீதியினிமித்தம்

துன்பப்பட்டார். ஆனால், எதிர்வந்த ஒவ்வொரு சோதனையையும் மேற்கொண்டார். சோதனைகளும், பாடுகளும் எவ்வளவு கடுமையானவைகளாக இருந்தாலும், அவர் ஒருபோதும் தேவனுக்குக் கீழ்ப்படியாமலிருக்கவில்லை (பிலிப். 2: 5-8; I. பேது. 2 : 19 - 25). இயேசுவானவர் ஜெயம் பெற்று, நித்திய சிம்மாசனத்தில் வீற்றிருக்கிறார் என்று வெளி. 3 : 21 நமக்கு நினைவூட்டுகிறது. ஆகவே நாமும் அவரைப்போலவே ஜெயங்கொண்டால், நாமும் கிறிஸ்துவுடனே கூட சிங்காசனத்தில் உட்காருவோம். நாம் எப்படி, கிறிஸ்துவின் இரத்தத்தாலும், தேவனுடைய வசனத்தாலும், நம்முடைய ஜீவனுக்கும் மேலாக நமது கர்த்தரை நேசிப்பதாலும் மேற்கொள்ளுகிறோம் என்று வெளி. 12 : 11 குறிப்பிட்டுக் காட்டுகிறது. மேலும், வெளி 15 : 2, பரலோகத்தில் மீட்கப்பட்டவர்கள் பற்றிய ஒரு அழகான காட்சியைக் காட்டுகிறது. இவர்களெல்லாம், சாத்தானையும், அவனுடைய தந்திரங்களையும் மேற்கொண்டவர்களென்று வலியுறுத்தப்பட்டுள்ளது. இன்றும், வெளி. 21 : 7ல், இவைகளையெல்லாம் சேர்த்து, இவ்விதம் சொல்கிறது, "ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்ளுவான்; நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான்". இந்த பூமியில் நாம் எப்படிப் பாடுபட்டாலும், நித்தியத்தில் நமக்காக காத்துக்கொண்டிருக்கிற மகத்தான சுதந்திரத்தைப் பாருங்கள்! ஆனால், இது ஜெயங்கொண்டால் மாத்திரம் கிடைக்கும். பாதியிலே ஓடிப்போகிறவர்களுக்கு பரலோகம் சொந்தமல்ல. ஆகவே தான், வெளிப்படுத்தல் நாம் மரணபரியந்தம் உண்மையாயிருக்க வேண்டுமென்றும் (வெளி. 2 : 10). உறுதியாகப் பற்றிக் கொள்ள வேண்டுமென்றும் (2 :13, 25, 3 : 11) தேவனுடைய வசனத்தைக் கைக் கொள்ள வேண்டுமென்றும் ( 3 : 8, 14 : 12) வலியுறுத்துகிறது.

வெளிப்படுத்தல் நூல் முழுவதும் பரவியிருக்கிற இன்னொரு முக்கியமான பாடம், "மனந்திரும்புதல்" ஜெயங்கொள்ளுதலுக்கு முன்னோடியாக திகழ்கிறது என்பதாகும். இதிலுள்ள ஏழு சபைகளில், ஐந்து சபையாருக்கு "மனந்திரும்புங்கள்" என்று சொல்லப்பட்டுள்ளது (வெளி. 2 : 5, 16, 21-22, 3 : 3, 19). ஏழாம் முத்திரையின் வாதைகள், மனந்திரும்புதலைக் கொண்டுவரும்படியாக ஏற்படுத்தப்பட்டிருந்தது. (வெளி. 9 : 20, 21) தேவ கோபத்தைக் கொண்டிருந்த ஏழு கலசங்கள் மனந்திரும்பாதவர்கள் மீது ஊற்றப்பட்டது (வெளி. 16 : 9 -11). மனந்திரும்பாதவர்கள் இரட்சிக்கப்பட வேண்டுமென்றால், உபதேசத்தின்படி சுத்தமுள்ளவர்களாய் தங்களை காத்துக்கொண்டு மற்றும்

கிறிஸ்தவர்களாக கிறிஸ்தவர்களின் மத்தியில் ஜீவிப்பதும் அவசியம் என்ற செய்தியும் இதோடு தொடர்புடையதாகவே இருக்கிறது. (வெளி. 2 : 14 - 15, 20; 3 : 4, 18; 4 : 4; 7 : 13-14; 14 : 3-5; 19 : 8). உண்மையான மனந்திரும்புதல் என்பது மனமாற்றமாகும். அது செயலிலே மாற்றத்தைக் கொண்டு வரும், கிறிஸ்தவர்கள் மனமாற்றமுள்ளவர்களாயிருந்து, தேவ சித்தத்திற்கு இணங்கி, சத்தியத்தை விசுவாசித்து, போதித்து அதன்படி வாழவேண்டும். ஜெயங்கொள்ளுவதற்கு இது ஒரு முக்கியமான பங்காகும். (வெளி 12 : 11).

வெளிப்படுத்தல் நூலில் உள்ள அடையாளங்கள் மற்றும் எண்களை நாம் முழுமையாக ஒருவேளை புரிந்துகொள்ள முடியாவிட்டாலும், இந்நூலில் உள்ள மிகக் கடினமான பகுதிகளிலும் கூட, மீண்டும், மீண்டும் வருகின்ற ஒரு முக்கியமான செய்தியென்னவெனில், இனிமேல் வர இருக்கின்ற நியாயத்தீர்ப்பின் நாள் மற்றும் நீதிமான்கள் நித்திய ஜீவனைப் பெறுவர் என்பதும், துன்மார்க்கர் நித்திய காலமாகத் தண்டிக்கப்படுவர் என்பதும்தான். வெளிப்படுத்தல் நூலின் மற்ற காரியங்கள் நமக்கு ஒருவேளை புரியவில்லை என்றாலும், இச்செய்தி மிகத் தெளிவாய் புலப்படுகிறது. நாமனைவரும் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, அவருக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்பது, இதில் கவனிக்கப்பட வேண்டிய செய்தி.

இறுதியாக, இந்நூல் மற்றொரு வகையிலும் கவனிக்கத்தக்கது. இதில் நீதிமான்களுக்கு மகத்தான நித்திய ஆசீர்வாதங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு இந்நூலில் கொடுக்கப்பட்டுள்ள மகத்தான வாக்குத்தத்தங்கள் பற்றி ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். அனைத்து வாக்குத்தத்தங்களும் இனிவரக்கூடிய வாழ்க்கையில் கிடைக்கக்கூடிய பலன் பற்றியது. வேதாகமத்திலுள்ள, ஏனைய புத்தகங்களில்லாத அளவில், இதில் பரலோகம் பற்றிய காட்சி கொடுக்கப்பட்டுள்ளது. (குறிப்பாக 21, 22 அதிகாரம்). பரலோகம் பற்றி இதில் குறிப்பிடப்பட்டுள்ள காரியங்கள், நாம் சோதனைகளையும், உபத்திரவங்களையும் சந்திக்கும்போது நமக்கு தைரியத்தையும், பெலனையும் தரவேண்டும். இவைகள் தவிர இந்நூலில் ஏழு பாக்கிய வசனங்கள் உண்டு. (வெளி. 1 : 3; 14 : 13, 6 : 15, 19 : 9, 20 : 6; 22 : 7, 14).

இந்தப் புத்தகத்திலுள்ளவைகளைக் கேட்டு அதின்படி செய்கிறவர்களுக்கும் (வெளி. 1 : 3), கர்த்தருக்குள் மரிக்கிறவர்களுக்கும் (வெளி. 17 : 13); விழித்துக்கொண்டு தங்கள் வஸ்திரங்களைக் காத்துக் கொள்ளுகிறவர்களுக்கும் (வெளி. 19 : 9); முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குள்ளவர்களுக்கும் (வெளி. 20 : 6). இன்னும் வெளிப்படுத்தல் நூலில் சொல்லப்பட்டுள்ளவைகளையும் (வெளி. 22 : 7), தேவனுடைய

கட்டளைகளையும் கைக்கொள்ளுகிறவர்களுக்கும் (வெளி 22 : 14), ஆசிர்வாதங்கள் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆசீர்வாதங்கள் பரலோக பாக்கியத்தையும், நரகத்தின் தண்டனைகளுக்குத் தப்பித்துக் கொள்ளுதலையும் உள்ளடக்குகிறதாக உள்ளது.

அடுத்த கட்டுரையிலிருந்து, வெளிப்படுத்தல் நூலை நாம் வசனம், வசனமாகப் பார்க்க உள்ளோம். இந்நூலை அப்படி நாம் படிக்கும்போது, கடந்த கட்டுரைகளில் இந்நூலை எப்படிச் சரியான முறையில் அணுகி படிக்க வேண்டுமென்று கற்றுக்கொண்ட பாடங்களை மாத்திரமல்லாமல் (மற்றும் நாம் தவிர்க்க வேண்டிய கள்ள உபதேசங்கள்) இதிலடங்கியுள்ள மிகச் சிறந்த பாடங்களையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும். இந்த பாடமானது மனமாற்றத்திற்கும், பாவங்களை மேற்கொள்ளும்படியான ஒரு உறுதியை புதுப்பிப்பதற்கும் நம்மைத் தூண்டுவதாக. அதன் மூலம் தேவன் அவருடைய உண்மைப் பிள்ளைகளுக்கு நித்தியத்தில் ஆயத்தம் செய்து வைத்திருக்கிற மகத்தான ஆசீர்வாதங்களுக்கு பங்குள்ளவர்க்குவாராக!

**JON MACON** **EZSR**

## உங்கள் கவனத்திற்கு

அதிகத் தரமுள்ள பல வண்ணத் தாள்களைக் கொண்டு, நேர்த்தியான அளவுகளில் வடிவமைக்கப்பட்டு, சிறப்பான முறையில் அச்சிடப்பட்டு, எடுப்பான தோற்றம் கொண்ட சுவிசேஷக் கைப்பிரதிகள் (Gospel Tracts) உங்கள் உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது. **மிகக் குறைந்த விலை.** தேவைக்கு முந்துங்கள்.

### தலைப்புகள்

1. உன்னை நீயே எண்ணிப்பார்
2. கண் இல்லாதவன் கண்டு கொண்டான்
3. மனுக்குலத்துக்கு விமோசனம் உண்டா?
4. இன்றைக்கு நீங்கள் மரிக்க நேர்ந்தால்....
5. ஞானஸ்நானம்
6. யார் கிறிஸ்தவன்?
7. ஆராதனை
8. சபை என்பது என்ன?

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**
தபால் பெட்டி எண் - 27, காங்கேயம் - 638 701.

# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

**HINDI** : Sunday 8.45 P.M. - 9.00 P.M., Thursdays, 9.00 - 9.15 P.M Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

**ENGLISH** : Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049.

**TELUGU** : Sundays, Tuesdays, and Thursdays, 2.00 P.M. -2.15 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

**TAMIL** : Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Speaker, P.R.Swamy, Box 8405, Banagalore - 560 084.

**MALAYALAM** : Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K.Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

**KANNADA** : Sundays, 1.45 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004.

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN / ERD / WD / PP/5
Posted at Erode HPO on 20, OCT 99
OCT 99 THIRUMARAI AASAAN Regd. No. TN / ERD / 49

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.

இது, 15 பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி, இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு."**சான்றிதழ்**" வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

**இயக்குநர்**
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
**த.பெ. எண். 27, காங்கயம் – 638 701.**

Published by Church of Christ, Kangayam.
Printed at Konar Printers, Madurai. Editor : S. RAJANAYAGAM.

PRINTED MATTER

TO

BOOK-POST

From
THE EDITOR
THIRUMARAI AASAAN
Post Box No. 27,
KANGAYAM - 638 701.
Ph:04257 - 20030.